www.surabooks.com

சுராவின்

# சமூக அறிவியல்

## 8 ஆம் வகுப்பு

திருத்தியமைக்கப்பட்ட புதிய பாடநூலின்படி தயாரிக்கப்பட்டது.

**சிறப்பம்சங்கள்**

- பாடப்பகுதிகளிலுள்ள எல்லா பிரிவுகளிலும், விரிவான விளக்கங்களுடன் கூடிய விடைகள் கொடுக்கப்பட்டுள்ளன.
- ஒவ்வொரு பாடத்திலும் கூடுதலான வினா விடைகள் கொடுக்கப்பட்டுள்ளன.
- ஒவ்வொரு பாடத்தின் இறுதியிலும் அலகுத் தேர்வு வினாத்தாள் – விடைக் குறிப்புகளுடன் கொடுக்கப்பட்டுள்ளன.
- காலாண்டுத் தேர்வு 2023, அரையாண்டுத் தேர்வு – 2023 மற்றும் ஆண்டுப் பொதுத்தேர்வு ஏப்ரல் 2023, 2024 & 2025 வினாக்கள் ஆங்காங்கே சுட்டிக்காட்டப்பட்டுள்ளன.
- ஆண்டுப் பொதுத்தேர்வு – ஏப்ரல் 2025 வினாத்தாள் விடைகளுடன் கொடுக்கப்பட்டுள்ளது.

சுரா பப்ளிகேஷன்ஸ்
சென்னை

For Orders Contact

80562 94222 / 81242 01000 / 81243 01000
96001 75757 / 98409 26027

enquiry@surabooks.com Ph:8124201000 / 8124301000

www.surabooks.com

© வெளியீட்டாளர்கள்

Code No. : FY-8-SS-TM

**Our Guides for Std. VIII to X**

- சுராவின் தமிழ் உரைநூல்
- Sura's Smart English Guide
- Sura's Maths Guide (EM & TM)
- Sura's Science Guide (EM &TM)
- Sura's Social Science Guide (EM & TM)

**Also available for XI & XII Standard**

Guides :

- சுராவின் தமிழ் உரைநூல்
- Sura's Smart English
- Sura's Mathematics (EM/TM)
- Sura's Physics (EM/TM)
- Sura's Chemistry (EM/TM)
- Sura's Bio-Botany & Botany (EM/TM) (Short Version & Long Version)
- Sura's Bio-Zoology & Zoology (EM/TM) (Short Version & Long Version)
- Sura's Computer Science (EM/TM)
- Sura's Computer Applications (EM/TM)
- Sura's Commerce (EM/TM)
- Sura's Economics (EM/TM)
- Sura's Accountancy (EM/TM)
- Sura's Business Maths (EM)

**தலைமை அலுவலகம்**

**சுரா பப்ளிகேஷன்ஸ்**

1620, 'ஜே' பிளாக், 16-ஆவது பிரதான சாலை,

அண்ணா நகர், சென்னை-600 040.

**Phone :** 044 - 4862 9977, 044 - 4862 7755.

**e-mail :** orders@surabooks.com

**website :** www.surabooks.com

**For Orders Contact**

80562 94222

81242 01000

81243 01000

96001 75757

98409 26027

25/04/2025



www.surabooks.com

# பதிப்பாசிரியர் உரை...

**எங்கள் வாழ்த்திற்குரிய**

**இனிய மாணவ செல்வங்களே!**

உங்களை வெற்றிப் பாதையில் அழைத்துச் செல்லும் வழிகாட்டி **'சுராவின் சமூக அறிவியல்'** ஆகும். புதிதாக திருத்தியமைக்கப்பட்ட பாடநூலின்படி உருவாக்கப்பட்டுள்ள **சுராவின் 8ஆம் வகுப்பு – சமூக அறிவியல்** வழிகாட்டியை உங்களிடம் சேர்ப்பதில் பெருமையும் மகிழ்ச்சியும் அடைகிறோம்.

8ஆம் வகுப்பு பொதுத்தேர்வுகளில் நீங்கள் அதிக மதிப்பெண் பெற சரியான விடைகளுடன், எளிய முறையில் இந்த வழிகாட்டி தயாரிக்கப்பட்டுள்ளது.

ஆசிரியர்களின் கற்றுத்தரும் பணியில் உறுதுணையாகவும், மாணவர்கள் பாடங்களைக் கற்கும் விதத்தில் ஊக்கம் தரும் வகையிலும் நமது வழிகாட்டி திகழும் என நம்புகிறோம்.

இறையருளை வேண்டுகிறோம்.

நலமே விளைக!

– பதிப்பகத்தார்

**சுபாஷ் ராஜ்,** B.E., M.S.,

(சுரா பப்ளிகேஷன்ஸ்)



enquiry@surabooks.com Ph:8124201000 / 8124301000

www.surabooks.com

# TO ORDER WITH US

**SCHOOLS and TEACHERS:**

We are grateful for your support and patronage to **'SURA PUBLICATIONS'**

Kindly prepare your order in your School letterhead and send it to us.

For Orders contact: 81242 01000 / 81243 01000

**DIRECT DEPOSIT**

| | | |
|---|---|---|
| A/c Name | : | **Sura Publications** |
| Our A/c No. | : | **36550290536** |
| Bank Name | : | **STATE BANK OF INDIA** |
| Bank Branch | : | Padi |
| IFSC | : | SBIN0005083 |

| | | |
|---|---|---|
| A/c Name | : | **Sura Publications** |
| Our A/c No. | : | **21000210001240** |
| Bank Name | : | **UCO BANK** |
| Bank Branch | : | Anna Nagar West |
| IFSC | : | UCBA0002100 |

| | | |
|---|---|---|
| A/c Name | : | **Sura Publications** |
| Our A/c No. | : | **6502699356** |
| Bank Name | : | **INDIAN BANK** |
| Bank Branch | : | Asiad Colony |
| IFSC | : | IDIB000A098 |

| | | |
|---|---|---|
| A/c Name | : | **Sura Publications** |
| Our A/c No. | : | **1154135000017684** |
| Bank Name | : | **KVB BANK** |
| Bank Branch | : | Anna Nagar |
| IFSC | : | KVBL0001154 |

| | | |
|---|---|---|
| A/c Name | : | **Sura Publications** |
| Our A/c No. | : | **13240200032412** |
| Bank Name | : | **FEDERAL BANK** |
| Bank Branch | : | Anna Nagar |
| IFSC | : | FDRL0001324 |

| | | |
|---|---|---|
| A/c Name | : | **Sura Publications** |
| Our A/c No. | : | **50200031530945** |
| Bank Name | : | **HDFC BANK** |
| Bank Branch | : | Cenotaph Road, Teynampet |
| IFSC | : | HDFC0001216 |

After Deposit, please send challan and order to our address.
email to : orders@surabooks.com / Whatsapp : 81242 01000.

G Pay **For Google Pay : 98409 26027**

**For PhonePe : 98409 26027**

**DEMAND DRAFT / CHEQUE**

Please send Demand Draft / cheque in favour of **'SURA PUBLICATIONS'** payable at **Chennai**. The Demand Draft / cheque should be sent with your order in School letterhead.

**STUDENTS :**

Order via Money Order (M/O) to

**SURA PUBLICATIONS**
1620, 'J' Block, 16th Main Road, Anna Nagar, Chennai - 600 040.
Phone : 044-4862 9977, 044-4862 7755.
Mobile : 96001 75757 / 81242 01000 / 81243 01000.
email : orders@surabooks.com Website : www.surabooks.com

www.surabooks.com

# பொருளடக்கம்

## வரலாறு



| அலகு | பாடத் தலைப்புகள் | பக்க எண் | மாதம் |
|---|---|---|---|
| 1 | ஐரோப்பியர்களின் வருகை | 1-10 | ஜூன் |
| 2 | வர்த்தகத்திலிருந்து பேரரசு வரை | 11-21 | ஜூன் |
| 3 | கிராம சமூகமும் வாழ்க்கை முறையும் | 22-30 | ஜூலை |
| 4 | மக்களின் புரட்சி | 31-40 | ஆகஸ்ட் |
| 5 | இந்தியாவில் கல்வி வளர்ச்சி | 41-49 | அக்டோபர் |
| 6 | இந்தியாவில் தொழிலகங்களின் வளர்ச்சி | 50-57 | நவம்பர் |
| 7 | ஆங்கிலேயர் ஆட்சியில் நகர்ப்புற மாற்றங்கள் | 58-66 | நவம்பர் |
| 8 | காலங்கள்தோறும் இந்தியப் பெண்களின் நிலை | 67-74 | ஜனவரி |



## புவியியல்



| அலகு | பாடத் தலைப்புகள் | பக்க எண் | மாதம் |
|---|---|---|---|
| 1 | பாறை மற்றும் மண் | 75-87 | ஜூன் |
| 2 | வானிலை மற்றும் காலநிலை | 88-97 | ஜூலை |
| 3 | நீரியல் சுழற்சி | 98-106 | ஜூலை |
| 4 | இடம் பெயர்தல் மற்றும் நகரமயமாதல் | 107-114 | ஆகஸ்ட் |
| 5 | இடர்கள் | 115-123 | அக்டோபர் |
| 6 | தொழிலகங்கள் | 124-133 | அக்டோபர் |
| 7 | கண்டங்களை ஆராய்தல்<br>(ஆப்பிரிக்கா, ஆஸ்திரேலியா மற்றும் அண்டார்டிகா) | 134-148 | நவம்பர் &<br>டிசம்பர் |
| 8 | புவிப்படங்களைக் கற்றறிதல் | 149-158 | ஜனவரி |



## குடிமையியல்



| அலகு | பாடத் தலைப்புகள் | பக்க எண் | மாதம் |
|---|---|---|---|
| 1 | மாநில அரசு எவ்வாறு செயல்படுகிறது | 159-165 | ஜூன் |
| 2 | குடிமக்களும் குடியுரிமையும் | 166-172 | ஜூலை |
| 3 | சமயச் சார்பின்மையைப் புரிந்துகொள்ளுதல் | 173-180 | ஆகஸ்ட் |
| 4 | மனித உரிமைகளும் ஐக்கிய நாடுகள் சபையும் | 181-189 | அக்டோபர் |
| 5 | சாலை பாதுகாப்பு விதிகள் மற்றும் நெறிமுறைகள் | 190-199 | நவம்பர் |
| 6 | பாதுகாப்பு மற்றும் வெளியுறவுக் கொள்கை | 200-210 | ஜனவரி |
| 7 | நீதித்துறை | 211-222 | பிப்ரவரி |





enquiry@surabooks.com Ph:8124201000 / 8124301000

www.surabooks.com

# பொருளியல்

| அலகு | பாடத் தலைப்புகள் | பக்க எண் | மாதம் |
|---|---|---|---|
| 1 | பணம், சேமிப்பு மற்றும் முதலீடுகள் | 223-231 | ஆகஸ்ட், செப்டம்பர் |
| 2 | பொது மற்றும் தனியார் துறைகள் | 232-242 | பிப்ரவரி |
| ஆண்டுப் பொதுத் தேர்வு - ஏப்ரல் 2025 வினாத்தாள் விடைகளுடன் | | 243-250 | |

# பாடத்திட்டம்

| மாதம் | வரலாறு | புவியியல் | குடிமையியல் | பொருளியல் | மொத்த அலகுகள் |
|---|---|---|---|---|---|
| ஜூன் | 1, 2 | 1 | 1 | 0 | 4 |
| ஜூலை | 3 | 2,3 | 2 | 0 | 4 |
| முதல் இடைத் தேர்வு (ஜூன், ஜூலை) | | | | | |
| ஆகஸ்ட் | 4 | 4 | 3 | 1 | 4 |
| செப்டம்பர் | 0 | 0 | 0 | 1 | 1 |
| காலாண்டுப் பொதுத் தேர்வு (ஜூன் - செப்டம்பர்) | | | | | |
| அக்டோபர் | 5 | 5, 6 | 4 | 0 | 4 |
| நவம்பர் | 6, 7 | 7 | 5 | 0 | 4 |
| இரண்டாம் இடைத் தேர்வு (அக்டோபர், நவம்பர்) | | | | | |
| டிசம்பர் | 0 | 7 | 0 | 0 | 1 |
| அரையாண்டுப் பொதுத் தேர்வு (ஜூன் - டிசம்பர்) | | | | | |
| ஜனவரி | 10 | 8 | 6 | 5 | 4 |
| பிப்ரவரி | 11 | 0 | 0 | 0 | 1 |
| மார்ச் | மூன்றாம் இடைத் தேர்வு (ஜனவரி - பிப்ரவரி) | | | | |
| ஏப்ரல் | ஆண்டுத் தேர்வு (மொத்த அலகுகள்) | | | | |

www.surabooks.com

# அலகு 1 வரலாறு

# ஐரோப்பியர்களின் வருகை

## மதிப்பீடு

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்.**

**1. இந்தியாவில் போர்ச்சுக்கீசிய ஆதிக்கத்திற்கு அடித்தளம் அமைத்தவர் யார்?** (அரையாண்டுத் தேர்வு 2023)

(அ) வாஸ்கோடகாமா (ஆ) பார்த்தலோமியோ டயஸ்
(இ) அல்போன்சோ-டி-அல்புகர்க் (ஈ) பிரான்சிஸ்கோ-டி-அல்மெய்டா

**விடை : (இ) அல்போன்சோ-டி-அல்புகர்க்**

**2. பின்வரும் ஐரோப்பிய நாடுகளுள் இந்தியாவுக்கு கடல்வழியைக் கண்டுபிடிப்பதில் முதன்மையாக இருந்த நாடு எது?** (ஏப்ரல் 2023)

(அ) நெதர்லாந்து (டச்சு) (ஆ) போர்ச்சுகல்
(இ) பிரான்ஸ் (ஈ) பிரிட்டன்

**விடை : (ஆ) போர்ச்சுகல்**

**3. 1453ஆம் ஆண்டு கான்ஸ்டாண்டிநோபிள் யாரால் கைப்பற்றப்பட்டது?**

(அ) பிரான்ஸ் (ஆ) துருக்கி
(இ) நெதர்லாந்து (டச்சு) (ஈ) பிரிட்டன்

**விடை : (ஆ) துருக்கி**

**4. சர் வில்லியம் ஹாக்கின்ஸ் _______ நாட்டைச் சேர்ந்தவர்.**

(அ) போர்ச்சுக்கல் (ஆ) ஸ்பெயின் (இ) இங்கிலாந்து (ஈ) பிரான்ஸ்

**விடை : (இ) இங்கிலாந்து**

**5. இந்தியாவில் ஆங்கிலேயர்கள் கட்டிய முதல் கோட்டை** (காலாண்டுத் தேர்வு 2023)

(அ) புனித வில்லியம் கோட்டை (ஆ) புனித ஜார்ஜ் கோட்டை
(இ) புனித லூயிஸ் கோட்டை (ஈ) புனித டேவிட் கோட்டை

**விடை : (ஆ) புனித ஜார்ஜ் கோட்டை**

**6. பின்வரும் ஐரோப்பிய நாட்டினருள் வியாபாரத்திற்காக, இந்தியாவிற்கு வருகை தந்த கடைசி ஐரோப்பிய நாட்டினர்** (ஏப்ரல் 2024)

(அ) ஆங்கிலேயர்கள் (ஆ) பிரெஞ்சுக்காரர்கள்
(இ) டேனியர்கள் (ஈ) போர்ச்சுக்கீசியர்கள்

**விடை : (ஆ) பிரெஞ்சுக்காரர்கள்**

**7. தமிழ்நாடு கடற்கரையோரத்தில் உள்ள தரங்கம்பாடி _______ வர்த்தக மையமாக இருந்தது.**

(அ) போர்ச்சுக்கீசியர்கள் (ஆ) ஆங்கிலேயர்கள்
(இ) பிரெஞ்சுக்காரர்கள் (ஈ) டேனியர்கள்

**விடை : (ஈ) டேனியர்கள்**

www.surabooks.com



## II. கோடிட்ட இடங்களை நிரப்புக.

1. இந்தியாவின் தேசிய ஆவணக்காப்பகம் (NAI) ________ ல் அமைந்துள்ளது.
(ஏப்ரல் 2025) **விடை: புதுடெல்லியில்**

2. போர்ச்சுக்கீசிய மாலுமியான பார்த்தலோமியோ டயஸ் ________ என்பவரால் ஆதரிக்கப்பட்டார். **விடை: மன்னர் இரண்டாம் ஜான்**

3. இந்தியாவில் அச்சு இயந்திரம் 1556இல் ________ அரசால் கோவாவில் நிறுவப்பட்டது. **விடை: போர்ச்சுகீசிய**

4. முகலாயப் பேரரசர் ________ இந்தியாவில் ஆங்கிலேயர்கள் வர்த்தகம் செய்ய அனுமதி அளித்தார். (காலாண்டுத் தேர்வு 2023) **விடை: ஜஹாங்கீர்**

5. பிரெஞ்சு கிழக்கிந்திய நிறுவனம் ________ என்பவரால் நிறுவப்பட்டது. **விடை: கால்பர்ட்**

6. __________ என்ற டென்மார்க் மன்னர், டேனிஷ் கிழக்கிந்திய நிறுவனத்தை உருவாக்க ஒரு பட்டயத்தை வெளியிட்டார். **விடை: நான்காம் கிறிஸ்டியன்**

## III. பொருத்துக. (ஏப்ரல் 2025)

| | | | |
|---|---|---|---|
| 1. | டச்சுக்காரர்கள் | - | 1664 |
| 2. | ஆங்கிலேயர்கள் | - | 1602 |
| 3. | டேனியர்கள் | - | 1600 |
| 4. | பிரெஞ்சுக்காரர்கள் | - | 1616 |

| விடைகள் |
|---|
| **1602** |
| **1600** |
| **1616** |
| **1664** |

## IV. சரியா / தவறா எனக் குறிப்பிடுக.

1. சுயசரிதை, எழுதப்பட்ட ஆதாரங்களுள் ஒன்று ஆகும். **விடை: சரி**

2. நாணயங்கள் பயன்பாட்டு பொருள் ஆதாரங்களுள் ஒன்று ஆகும். **விடை: சரி**

3. ஆனந்தரங்கம், பிரிட்டிஷ் மொழிபெயர்ப்பாளராக இருந்தார். **விடை: தவறு**

4. வரலாற்று ஆவணங்கள் பாதுகாக்கப்படும் இடங்கள் ஆவணக் காப்பகங்கள் என்றழைக்கப்படுகிறது. **விடை: சரி**

## V. 1) பின்வரும் கூற்றினை ஆராய்ந்து சரியானவற்றை (✓) செய்க.

**1.**
1. ஆளுநர் நினோ-டி-குன்கா போர்ச்சுக்கீசிய தலைநகரை கொச்சியிலிருந்து கோவாவிற்கு மாற்றினார். (காலாண்டுத் தேர்வு 2023)
2. போர்ச்சுக்கீசியர்கள் இந்தியாவிலிருந்து கடைசியாக வெளியேறினர்.
3. டச்சுக்காரர்கள், சூரத்தில் தங்கள் முதல் வணிக மையத்தை நிறுவினர்.
4. இங்கிலாந்தின் மன்னர் முதலாம் ஜேம்ஸ், ஜஹாங்கீர் அவைக்கு சர் தாமஸ் ரோவை அனுப்பினார்.

(அ) 1 மற்றும் 2 சரி (ஆ) 2 மற்றும் 4 சரி
(இ) 3 மட்டும் சரி (ஈ) 1, 2 மற்றும் 4 சரி

**விடை: (ஈ) 1, 2 மற்றும் 4 சரி**

enquiry@surabooks.com Ph:8124201000 / 8124301000

www.surabooks.com



**2) தவறான இணையைக் கண்டறிக :**

1. (அ) பிரான்சிஸ் டே - டென்மார்க்
   (ஆ) பெட்ரோ காப்ரல் - போர்ச்சுகல்
   (இ) கேப்டன் ஹாக்கின்ஸ் - இங்கிலாந்து
   (ஈ) கால்பர்ட் - பிரான்ஸ்

**விடை: (அ) பிரான்சிஸ் டே - டென்மார்க்**

## VI. பின்வரும் வினாக்களுக்கு ஓரிரு வாக்கியங்களில் விடையளி.

**1. ஆவணக் காப்பகங்கள் பற்றி சிறுகுறிப்பு தருக.**

விடை: (i) வரலாற்று ஆவணங்கள் பாதுகாக்கப்படும் இடம் ஆவணக்காப்பகம் என்று அழைக்கப்படுகிறது.

(ii) இந்திய தேசிய ஆவணக்காப்பகம் (NAI) புதுடெல்லியில் அமைந்துள்ளது. இது இந்திய அரசின் ஆவணங்களைப் பாதுகாக்கும் முதன்மைக் காப்பகமாகும்.

**2. நாணயங்களின் முக்கியத்துவம் பற்றி எழுதுக.** (ஏப்ரல் 2024)

விடை: (i) நாணயங்கள் நிருவாக வரலாற்றை அறிய ஒரு சிறந்த, ஆதாரமாக திகழ்கின்றன.

(ii) நவீன இந்தியாவின் முதல் நாணயம் கி.பி.1862 ஆம் ஆண்டில் ஆங்கில ஆட்சியில் வெளியிடப்பட்டது.

**3. இளவரசர் ஹென்றி "மாலுமி ஹென்றி" என ஏன் அழைக்கப்படுகிறார்?** (ஏப்ரல், அரையாண்டுத் தேர்வு 2023)

விடை: போர்ச்சுகீசிய இளவரசர் ஹென்றி உலகின் அறியப்படாத பகுதிகளை ஆராயவும், சாகச வாழ்க்கையை மேற்கொள்ளவும் தனது நாட்டு மக்களை ஊக்குவித்தார். எனவே அவர் மாலுமி ஹென்றி என்று அழைக்கப்படுகிறார்.

**4. இந்தியாவில் டச்சுக்காரர்களால் நிறுவப்பட்ட முக்கிய வர்த்தக மையங்களின் பெயரை எழுதுக.**

விடை: **டச்சு வர்த்தக மையங்கள்:** பழவேற்காடு, சூரத், சின்சுரா, காசிம்பஜார், பாட்னா, நாகப்பட்டினம், பாலசோர் மற்றும் கொச்சின் ஆகும்.

**5. இந்தியாவில் இருந்த ஆங்கிலேயர்களின் வர்த்தக மையங்களைக் குறிப்பிடுக.** (காலாண்டுத் தேர்வு 2023, ஏப்ரல் 2025)

விடை: **ஆங்கிலேயர்களின் வர்த்தக மையங்கள்:** சூரத், ஆக்ரா, அகமதாபாத், புரோச், மசூலிப்பட்டினம், சென்னை, கல்கத்தா ஆகியவை ஆகும்.

## VII. விரிவான விடையளி :

**1. நவீன இந்தியாவின் வரலாற்று ஆதாரங்கள் பற்றி குறிப்பிடுக.** (காலா. தேர்வு 2023)

விடை: **நவீன இந்தியாவின் வரலாற்று முதன்மை ஆதாரங்கள்:**

நவீன இந்தியாவின் வரலாற்று ஆதாரங்கள் நாட்டின் அரசியல், சமூக-பொருளாதார மற்றும் கலாச்சார முன்னேற்றங்களை பற்றி அறிய நமக்கு உதவுகின்றன. அவை எழுதப்பட்ட ஆதாரங்கள் மற்றும் பயன்பாட்டு ஆதாரங்கள் என வகைப்படுத்தப்படுகின்றன.

www.surabooks.com



**எழுதப்பட்ட ஆதாரங்கள்:**

(i) அச்சு இயந்திரம் கண்டுபிடிப்பிற்குப் பின் பல்வேறு மொழிகளில் எண்ணற்ற புத்தகங்கள் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டன. இதன் விளைவாக கலை, இலக்கியம், வரலாறு, அறிவியல் போன்ற துறைகளைப் பற்றி மக்கள் எளிதாக அறிய முடிந்தது.

(ii) எழுதப்பட்ட ஆதாரங்கள் என்பவை, இலக்கியங்கள், பயணக்குறிப்புகள், நாட்குறிப்புகள், சுயசரிதை, துண்டு பிரசுரங்கள், அரசாங்க ஆவணங்கள் மற்றும் கையெழுத்துப் பிரதிகள் ஆகியவற்றை உள்ளடக்கியதாகும்.

**பயன்பாட்டு பொருள் ஆதாரங்கள்:**

(i) பல ஓவியங்கள் மற்றும் சிலைகள் நவீன இந்திய வரலாற்றின் முதன்மை ஆதாரங்களாக உள்ளன. அவை தேசியத்தலைவர்களின் சாதனைகளையும், வரலாற்றுப் பிரமுகர்கள் பற்றிய தகவல்களையும் நமக்கு தருகின்றன.

(ii) அருங்காட்சியகங்கள் நமது கலாச்சாரத்தைப் பாதுகாத்து மேம்படுத்த உதவுகின்றன.

(iii) நிருவாக வரலாற்றை அறிய ஒரு சிறந்த ஆதாரமாக நாணயங்கள் திகழ்கின்றன.

---

**2. போர்ச்சுக்கீசியர்கள் எவ்வாறு இந்தியாவில் தங்களது வர்த்தக மையங்களை நிறுவினர்?**

விடை: **போர்ச்சுக்கீசிய வணிக மையங்கள்:**

(i) இந்தியாவில் போர்ச்சுகீசிய அதிகாரத்தை உண்மையில் நிறுவியவர் அல்போன்சா - டி - அல்புகர்க் ஆவார்.

(ii) அவர் பிஜப்பூர் சுல்தானிடமிருந்து 1510ல் கோவாவை கைப்பற்றினார்.

(iii) 1515ல் பாரசீக வளைகுடாவில் உள்ள ஆர்மஸ் துறைமுகப் பகுதியில் போர்ச்சுகீசிய அதிகாரத்தை விரிவுபடுத்தினார்.

(iv) அல்புகர்க்குவிற்கு பிறகு கவர்னரான நினோ-டி-குன்கா 1530ல் தலைநகரை கொச்சியிலிருந்து கோவாவிற்கு மாற்றினர்.

(v) போர்ச்சுகீசியர் 16ஆம் நூற்றாண்டில் இந்தியாவின் மேற்கு கடற்கரையில் கோவா, டையூ, டாமன், சால்செட், பசீன், சௌல் மற்றும் பம்பாய் போன்ற பகுதிகளைக் கைப்பற்றினர்.

(vi) வங்காளக் கடற்கரையில் ஹுக்ளி, சென்னை கடற்கரையில் சாந்தோம் போன்ற பகுதிகளைக் கைப்பற்றினார்.

---

**3. ஆங்கிலேயர்கள், எவ்வாறு இந்தியாவில் தங்களது வர்த்தக மையங்களை நிறுவினர்?** **(அரையாண்டுத் தேர்வு 2023, ஏப்ரல் 2024)**

விடை: **ஆங்கிலேயர்களின் வர்த்தக மையங்கள்:**

(i) இங்கிலாந்து இராணி எலிசபெத் கிழக்கிந்திய நாடுகளுடன் வர்த்தகம் செய்ய வர்த்தகங்கள் நிறுவனத்திற்கு ஒரு அனுமதி பட்டயம் 1600ம் ஆண்டு வழங்கினார்.

(ii) 1608 ஆம் ஆண்டு ஜஹாங்கீர் அவைக்கு மாலுமி வில்லியம் ஹாக்கின்ஸ் சூரத் நகரில் ஒரு வணிக மையத்தை அமைக்க அனுமதி கோரினார். ஆனால் ஜஹாங்கீர் அனுமதி வழங்கவில்லை.

(iii) 1613ல் ஜஹாங்கீர் சூரத்தில் ஆங்கில வர்த்தக மையத்தை அமைக்க அனுமதித்தார்.

(iv) 1615ல் ஜஹாங்கீர் அவைக்கு இங்கிலாந்து மன்னர் ஜேம்ஸ் அவர்களால் சர் தாமஸ்ரோ அனுப்பப்பட்டார். அவர் ஆக்ராவில் மூன்றாண்டுகள் தங்கி ஜஹாங்கீரிடம் இந்தியாவில் வணிகம் செய்யும் உரிமையைப் பெற்றார்.

(v) ஆக்ரா, அகமதாபாத் மற்றும் புரோச் ஆகிய இடங்களில் சர்தாமஸ் ரோ வணிக மையங்களை நிறுவினார்.

(vi) 1611ல் வங்காள விரிகுடா கடற்கரையில் உள்ள மசூலிப்பட்டிணத்தில் நிறுவினர்.

(vii) 1639ல் பிரான்சிஸ் டே என்ற ஆங்கில வணிகர் சென்னையை குத்தகைக்கு வாங்கி அங்கு கிழக்கிந்திய கம்பெனியால் புனித ஜார்ஜ் கோட்டை என்ற வணிக மையத்தை நிறுவியது.


(viii) 1668இல் இரண்டாம் சார்லஸ் இடமிருந்து பம்பாயை குத்தகைக்கு (10 பவுண்டுகள்) கொடுத்து ஆங்கில கிழக்கிந்திய கம்பெனி குத்தகைக்கு பெற்றது.

(ix) 1690ஆம் ஆண்டு சுதாநுதி என்ற இடத்தில் ஜாப்சார்னாக் என்பவரால் ஒரு வர்த்தகமையம் நிறுவப்பட்டது. சுதாநுதி, காளிகட்டம் மற்றும் கோவிந்தபூர் ஆகிய மூன்று கிராமங்களின் ஜமீன்தாரி உரிமையை 1698இல் கிழக்கிந்திய கம்பெனி பெற்றது.

## VIII. வரைபட திறன்

**இந்திய ஆறுகள் வரைபடத்தில் கீழ்க்காணும் ஐரோப்பிய வர்த்தக மையங்களைக் குறித்து காட்டுக.**

1. கள்ளிக்கோட்டை 2. கொச்சின் 3. மெட்ராஸ் 4. பாண்டிச்சேரி
5. சூரத் 6. சின்சுரா 7. பழவேற்காடு 8. கல்கத்தா



www.surabooks.com



## IX. உயர் சிந்தனை வினா :

**கான்ஸ்டாண்டி நோபிள் வீழ்ச்சி ஐரோப்பிய நாடுகளை எவ்வாறு பாதித்தது?**

**விடை:** கி.பி. (பொ.ஆ) 1453ல் துருக்கியர்களால் கான்ஸ்டாண்டி நோபிள் கைப்பற்றப்பட்ட பிறகு இந்தியாவிற்கும், ஐரோப்பாவிற்குமிடையிலான நிலவழி மூடப்பட்டது. துருக்கி வட ஆப்பிரிக்காவிலும், பால்கன் தீபகற்பத்திலும் நுழைந்தது. இது ஐரோப்பிய நாடுகளை கிழக்கு நாடுகளுக்குப் புதிய கடல் வழியைக் கண்டுபிடிக்கத் தூண்டியது.

## கூடுதல் வினாக்கள்

## I. சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்.

**1. ஆனந்தரங்கம் ________ பிரெஞ்சு வர்த்தகத்தில் மொழி பெயர்ப்பாளராக (Dubash) இருந்தார்.**

(அ) பாண்டிச்சேரி (ஆ) சூரத் (இ) டாமன் (ஈ) சென்னை

**விடை : (அ) பாண்டிச்சேரி**

**2. தமிழ்நாடு ஆவணக்காப்பகம் என்று அழைக்கப்படும் 'சென்னை பதிப்பாசனம்' _____ யில் அமைந்துள்ளது.**

(அ) டெல்லி (ஆ) சென்னை (இ) மதுரை (ஈ) திருச்சி

**விடை: (ஆ) சென்னை**

**3. டெல்லியிலுள்ள இந்தியாவின் மிகப்பெரும் அருங்காட்சியகம் தொடங்கப்பட்ட ஆண்டு ________.**

(அ) 1949 (ஆ) 1849 (இ) 1947 (ஈ) 1955

**விடை: (அ) 1949**

**4. வாஸ்கோடகாமா இரண்டாவது முறையாக இந்தியா வந்தபொழுது ____________ இல் ஒரு வர்த்தக மையத்தை நிறுவினார்.**

(அ) கொச்சின் (ஆ) கள்ளிக்கோட்டை

(இ) கண்ணனூர் (ஈ) கோவா

**விடை: (இ) கண்ணனூர்**

**5. நினோ–டி–குன்கா 1530ல் தலைநகரை கொச்சியிலிருந்து ________ விற்கு மாற்றினார்.**

(அ) கோவா (ஆ) கொல்கத்தா (இ) மும்பை (ஈ) டெல்லி

**விடை: (அ) கோவா**

**6. ஆரம்பத்தில் ________ டச்சுக்காரர்களின் தலைநகராக இருந்தது.**

(அ) கோவா (ஆ) டையூ (இ) டாமன் (ஈ) பழவேற்காடு

**விடை: (ஈ) பழவேற்காடு**

**7. இந்தியாவின் முதல் பிரெஞ்சு வணிகமையம் ________.**

(அ) மும்பை (ஆ) சூரத் (இ) மசூலிப்பட்டினம் (ஈ) மாஹி

**விடை: (ஆ) சூரத்**

www.surabooks.com



## II. கோடிட்ட இடங்களை நிரப்புக.

1. போர்ச்சுகீசிய இளவரசர் ஹென்றி _______ என அழைக்கப்பட்டார்.

**விடை: மாலுமி ஹென்றி**

2. பிரான்சிஸ்-டி-அல்மெய்டா _______ கொள்கையை பின்பற்றினார்.

**விடை: நீலநீர்க் கொள்கை**

3. பிரான்சின் இரண்டாவது வர்த்தக மையம் _______. **விடை: மசூலிப்பட்டினம்**

4. அல்போன்சா-டி-அல்புகர்க் பீஜப்பூர் சுல்தானிடமிருந்து நவம்பர் 1510இல் _______ கைப்பற்றினார்.

**விடை: கோவாவைக்**

5. ஜார்ஜ் வில்லியம் பாரஸ்ட் என்பவர் இந்திய தேசிய ஆவணக்காப்பகத்தின் _______ என அழைக்கப்படுகிறார். **விடை: தந்தை**

6. சான்றுகள் _______ வகைப்படும். **விடை: இரண்டு**

7. சென்னை நாட்குறிப்பு பதிவுகள் _______ ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது. **விடை: 1917**

8. ரிசர்வ் வங்கி முறையாக _________ ல் நிறுவப்பட்டது. **விடை: 1935**

9. கி.பி. 1487 ஆம் ஆண்டு போர்ச்சுகீசிய மாலுமியான பார்த்தலோமியா டயஸ் _______ முனையை அடைந்தார். ஸவிடை: தெற்குு

10. 1759ல் நடைபெற்ற _________ போரில் ஆங்கிலேயர்கள், டச்சுகாரர்களைத் தோற்கடித்தனர். **விடை: பெடரா**

## III. பொருத்துக.

| | | | |
|---|---|---|---|
| 1. | புனித பிரான்சிஸ் ஆலயம் | i. | கடலூர் |
| 2. | புனித லூயிஸ் கோட்டை | ii. | சென்னை |
| 3. | புனித ஜார்ஜ் கோட்டை | iii. | பாண்டிச்சேரி |
| 4. | புனித டேவிட் கோட்டை | iv. | கொச்சி |

**விடை: 1-iv, 2-iii, 3-ii, 4-i**

## IV. சரியா, தவறா?

1. பல ஓவியங்கள் மற்றும் சிலைகள் நவீன இந்திய வரலாற்றின் முதன்மை ஆதாரங்களாக உள்ளன. **விடை: சரி**

2. இந்தியா கேட், டெல்லி பாராளுமன்றம், குடியரசு தலைவர் மாளிகை போன்றவை எழுதப்பட்ட ஆதாரங்களுக்கு சான்றாகும். **விடை: தவறு**

3. லிஸ்பன், கோவா, பாண்டிச்சேரி மற்றும் சென்னை ஆகிய இடங்களில் ஆவணக் காப்பகங்கள் உள்ளன. **விடை: சரி**

4. அல்போன்சோ-டி-அல்புகர்க் இந்திய பெண்களுடனான போர்ச்சுகீசிய திருமணங்களை எதிர்த்தார். **விடை: தவறு**

## V. 1) பின்வரும் கூற்றினை ஆராய்ந்து சரியானவற்றை (✓) செய்க.

1. **பிரெஞ்சு கிழக்கிந்திய கம்பெனி 1664ல் கால்பர்ட் என்பவரால் உருவாக்கப்பட்டது.**
2. **முகலாயப் பேரரசர் ஜஹாங்கீர் சூரத்தில் வர்த்தக மையம் அமைக்க ஆங்கில கிழக்கிந்திய கம்பெனிக்கு 1613–ல் அனுமதி வழங்கினார்.**

www.surabooks.com



**3. இங்கிலாந்து மன்னர் இரண்டாம் சார்லஸ் டச்சு இளவரசி கேத்தினை திருமணம் செய்து கொண்டார்.**

**4. 1796ல் சுதாநுதியில் வலுவான ஒரு கோட்டை கட்டப்பட்டது. இது 1800ல் வில்லியம் கோட்டை என்று அழைக்கப்பட்டது.**

(அ) 2 மற்றும் 4 சரி (ஆ) 1 மற்றும் 2 சரி

(இ) 3 மற்றும் 4 சரி (ஈ) 3 மற்றும் 4 தவறு **விடை: (ஆ) 1 மற்றும் 2 சரி**

**2) தவறான இணையைக் கண்டறியவும் :**

(அ) பம்பாய் தீவு - குத்தகை

(ஆ) பரங்கிப் பேட்டை - டச்சு கோட்டை

(இ) வில்லியம் ஹாக்கின்ஸ் - கவர்னர்

(ஈ) கெல்டிரியா கோட்டை - பழவேற்காடு

**விடை: (இ) வில்லியம் ஹாக்கின்ஸ் - கவர்னர்**

## VI. குறுகிய விடையளிக்கவும்.

**1. எழுதப்பட்ட ஆதாரங்கள் யாவை?**

**விடை:** எழுதப்பட்ட ஆதாரங்கள் என்பவை இலக்கியங்கள், பயணக்குறிப்புகள், நாட்குறிப்புகள் சுயசரிதை, துண்டு பிரசுரங்கள், அரசாங்க ஆவணங்கள் மற்றும் கையெழுத்துப் பிரதிகள் ஆகியவற்றை உள்ளடக்கியதாகும்.

**2. தமிழ்நாடு ஆவணக்காப்பகம் – குறிப்பு வரைக.**

**விடை:** (i) தமிழ்நாடு ஆவணக்காப்பகம் என்று அழைக்கப்படும் சென்னை பதிப்பாசனம் சென்னையில் அமைந்துள்ளது.

(ii) இது தென்னிந்தியாவின் மிகப் பழமையான மற்றும் மிகப்பெரிய களஞ்சியங்களுள் ஒன்றாகும். அங்குள்ள பெரும்பாலான ஆவணங்கள் ஆங்கிலத்தில் உள்ளன.

**3. வாஸ்கோடகாமா– குறிப்பு வரைக.**

**விடை:** (i) வாஸ்கோடகாமா தென்னாப்பிரிக்காவின் தெற்கு முனையை அடைந்து, அங்கிருந்து மொசாம்பிக் பகுதிக்குத் தனது பயணத்தைத் தொடர்ந்தார். பின்னர் கி.பி (பொ.ஆ) 1498இல் கள்ளிக்கோட்டையை அடைந்தார்.

(ii) வாஸ்கோடகாமா 1501இல் இருபது கப்பல்களுடன் இரண்டாவது முறையாக இந்தியா வந்தபோது கண்ணனூரில் ஒரு வர்த்தக மையத்தை நிறுவினார். 1524-ல் வாஸ்கோடகாமா மூன்றாவது முறையாக இந்தியா வந்தபொழுது நோய்வாய்ப்பட்டு டிசம்பர் 1524-ல் கொச்சியில் காலமானார்.

**4. தமிழ்நாட்டில் டச்சுக்காரர்களின் ஆதிக்கம் பற்றி எழுதுக.**

**விடை:** (i) 1502 முதல் பழவேற்காட்டின் மீது கட்டுப்பாட்டை ஏற்படுத்திய போர்ச்சுக்கீசியர்கள் டச்சுக்காரர்களால் தங்களின் ஆதிக்கத்தை இழந்தனர்.

(ii) பழவேற்காட்டில் டச்சுக்காரர்கள் 1613இல் கெல்டிரியா கோட்டையைக் கட்டினர். அக்காலத்தில் பழவேற்காட்டிலிருந்து வைரங்கள் மேற்கத்திய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டன.

(iii) நாகப்பட்டினம், புன்னக்காயல், பரங்கிப்பேட்டை, கடலூர் மற்றும் தேவனாம்பட்டினம் ஆகியன டச்சுகாரர்களின் கோட்டைகள் மற்றும் கைப்பற்றிய பகுதிகளாகும்.

enquiry@surabooks.com Ph:8124201000 / 8124301000

www.surabooks.com



**5. நீலநீர்க்கொள்கை என்றால் என்ன?**

**விடை:** இந்தியாவில் போர்ச்சுக்கீசிய கப்பற்படையை பலப்படுத்துவதே அல்மெய்டாவின் நோக்கமாக இருந்தது அதற்காக அவர் பின்பற்றிய கொள்கை 'நீலநீர்க் கொள்கை' எனப்பட்டது.

## VII. விரிவான விடையளி :

**1. பிரெஞ்சுக்காரர்கள் எவ்வாறு இந்தியாவில் தங்களுடைய வணிக மையங்களை நிறுவினர் என்பதை விளக்குக.**

**விடை:** (i) பிரெஞ்சு கிழக்கிந்திய நிறுவனம் மன்னர் பதினான்காம் லூயியின் அமைச்சரான கால்பர்ட் என்பவரால் 1664இல் உருவாக்கப்பட்டது. 1667இல் பிரான்காய்ஸ் கரோன் தலைமையில் கீழ் ஒரு குழு இந்தியாவிற்கு பயணம் மேற்கொண்டது.

(ii) வியாபாரத்திற்காக இந்தியாவிற்கு வருகை தந்த ஐரோப்பிய நாடுகளுள் கடைசி ஐரோப்பிய நாடு பிரான்சு ஆகும்.

(iii) இந்தியாவில் முதல் பிரெஞ்சு வணிக மையத்தை கரோன், சூரத் நகரில் நிறுவினார்.

(iv) 1669-இல் மார்காரா கோல்கொண்டா சுல்தானின் அனுமதி பெற்று பிரான்சின் இரண்டாவது வர்த்தக மையத்தை மசூலிப்பட்டினத்தில் நிறுவினார்.

(v) பாண்டிச்சேரி இந்தியாவின் மிக முக்கியமான மற்றும் வளமான பிரெஞ்சு குடியேற்றமானது. பாண்டிச்சேரியில் புனித லூயிஸ் எனப்படும் கோட்டையை பிரான்காய்ஸ் மாட்டின் கட்டினார்.

(vi) பிரெஞ்சு கிழக்கிந்திய நிறுவனம் இந்தியாவில் பல்வேறு இடங்களில் வர்த்தக மையங்களை நிறுவியது. குறிப்பாக கடலோரப் பகுதிகளான, மாஹி, காரைக்கால், பாலசோர் மற்றும் காசிம் பசார் போன்ற இடங்கள் முக்கியமானவையாகும்.

(vii) 1742இல் பிரெஞ்சு கிழக்கிந்திய கம்பெனியின் ஆளுநராக ஜோசப் பிராங்காய்ஸ் டியூப்ளே என்பவர் நியமனம் செய்யப்பட்டார். அவரது நியமனத்தின் மூலம் பிரெஞ்சு அதிகாரம் மேலும் பலப்படுத்தப்பட்டது. அவருக்குப் பின் பாண்டிச்சேரியின் பிரெஞ்சு ஆளுநராக டுமாஸ் அனுப்பப்பட்டார்.

☆☆☆

# அலகுத் தேர்வு

காலம் : 60 நிமிடங்கள் | மதிப்பெண்கள்: 25

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்.** (3 × 1 = 3)

**1. 1453ஆம் ஆண்டு கான்ஸ்டாண்டி– நோபிள் யாரால் கைப்பற்றப்பட்டது?**

(அ) பிரான்ஸ் (ஆ) துருக்கி

(இ) நெதர்லாந்து (டச்சு) (ஈ) பிரிட்டன்

**2. இந்தியாவின் முதல் பிரெஞ்சு வணிகமையம் ________.**

(அ) மும்பை (ஆ) சூரத் (இ) மசூலிப்பட்டினம் (ஈ) மாஹி

**3. இந்தியாவில் ஆங்கிலேயர்கள் கட்டிய முதல் கோட்டை**

(அ) புனித வில்லியம் கோட்டை (ஆ) புனித ஜார்ஜ் கோட்டை

(இ) புனித லூயிஸ் கோட்டை (ஈ) புனித டேவிட் கோட்டை

enquiry@surabooks.com Ph:8124201000 / 8124301000

www.surabooks.com



**II. கோடிட்ட இடங்களை நிரப்புக.** (3 × 1 = 3)

1. இந்தியாவின் தேசிய ஆவணக்காப்பகம் (NAI) __________ ல் அமைந்துள்ளது.
2. பிரெஞ்சு கிழக்கிந்திய நிறுவனம் __________ என்பவரால் நிறுவப்பட்டது.
3. பிரான்சின் இரண்டாவது வர்த்தக மையம் _________.

**III. பொருத்துக.** (4 × 1 = 4)

| | | | |
|---|---|---|---|
| 1. | புனித பிரான்சிஸ் ஆலயம் | i. | கடலூர் |
| 2. | புனித லூயிஸ் கோட்டை | ii. | சென்னை |
| 3. | புனித ஜார்ஜ் கோட்டை | iii. | பாண்டிச்சேரி |
| 4. | புனித டேவிட் கோட்டை | iv. | கொச்சி |

**IV. சரியா? தவறா?** (2 × 1 = 2)

1. பல ஓவியங்கள் மற்றும் சிலைகள் நவீன இந்திய வரலாற்றின் முதன்மை ஆதாரங்களாக உள்ளன.
2. சுயசரிதை, எழுதப்பட்ட ஆதாரங்களுள் ஒன்று ஆகும்.

**V. ஓரிரு வாக்கியங்களில் விடையளி.** (4 × 2 = 8)

1. இளவரசர் ஹென்றி "மாலுமி ஹென்றி" என ஏன் அழைக்கப்படுகிறார்?
2. இந்தியாவில் இருந்த ஆங்கிலேயர்களின் வர்த்தக மையங்களைக் குறிப்பிடுக.
3. தமிழ்நாட்டில் டச்சுக்காரர்களின் ஆதிக்கம் பற்றி எழுதுக.
4. தமிழ்நாடு ஆவணக்காப்பகம் - குறிப்பு வரைக.

**VI. விரிவான விடையளிக்கவும்.** (1 × 5 = 5)

1. நவீன இந்தியாவின் வரலாற்று ஆதாரங்கள் பற்றி குறிப்பிடுக.

## விடைகள்

**I.** 1. (ஆ) துருக்கி 2. (ஆ) சூரத் 3. (ஆ) புனித ஜார்ஜ் கோட்டை

**II.** 1. புதுடெல்லியில் 2. கால்பர்ட் 3. மசூலிப்பட்டினம்

**III.** 1-iv, 2-iii, 3-ii, 4-i

**IV.** 1. சரி 2. சரி

**V.** 1. பார்க்க சுராவின் கையேடு VI - 3 2. பார்க்க சுராவின் கையேடு VI-5
3. பார்க்க சுராவின் கையேடு VI - 4 (கூடுதல்)
4. பார்க்க சுராவின் கையேடு VI - 2 (கூடுதல்)

**VI.** 1. பார்க்க சுராவின் கையேடு VII-1

☆☆☆

enquiry@surabooks.com Ph:8124201000 / 8124301000

# அலகு 2

# வர்த்தகத்திலிருந்து பேரரசு வரை

## மதிப்பீடு

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்.**

**1. 1757ஆம் ஆண்டில் வங்காளத்தை ஆட்சி செய்தவர்** (காலாண்டுத் தேர்வு 2023)

(அ) சுஜா-உத்- தௌலா (ஆ) சிராஜ்- உத் - தௌலா

(இ) மீர்காசிம் (ஈ) திப்பு சுல்தான்

**விடை : (ஆ) சிராஜ்- உத் - தௌலா**

---

**2. பிளாசிப் போர் நடைபெற்ற ஆண்டு** (ஏப்ரல் 2025)

(அ) 1757 (ஆ) 1764 (இ) 1765 (ஈ) 1775

**விடை : (அ) 1757**

---

**3. பக்சார் போரின் முடிவில் ஏற்பட்ட உடன்படிக்கை**

(அ) அலகாபாத் உடன்படிக்கை (ஆ) கர்நாடக உடன்படிக்கை

(இ) அலிநகர் உடன்படிக்கை (ஈ) பாரிசு உடன்படிக்கை

**விடை : (அ) அலகாபாத் உடன்படிக்கை**

---

**4. பாண்டிச்சேரி உடன்படிக்கையின்படி ________ கர்நாடக போர் முடிவுக்கு கொண்டுவரப்பட்டது.** (ஏப்ரல், அரையாண்டுத் தேர்வு 2023)

(அ) முதல் (ஆ) இரண்டாம் (இ) மூன்றாம் (ஈ) ஏதுமில்லை

**விடை : (ஆ) இரண்டாம்**

---

**5. ஹைதர் அலி மைசூர் அரியணை ஏறிய ஆண்டு _____.**

(அ) 1756 (ஆ) 1761 (இ) 1763 (ஈ) 1764

**விடை : (ஆ) 1761**

---

**6. மங்களூர் உடன்படிக்கை இவர்களுக்கு இடையே கையெழுத்தானது**

(அ) பிரெஞ்சுக்காரர்கள் மற்றும் திப்பு சுல்தான்

(ஆ) ஹைதர் அலி மற்றும் கள்ளிக்கோட்டை மன்னர் சாமரின்

(இ) ஆங்கிலேயர் மற்றும் திப்பு சுல்தான் (ஈ) திப்பு சுல்தான் மற்றும் மராத்தியர்கள்

**விடை : (இ) ஆங்கிலேயர் மற்றும் திப்பு சுல்தான்**

---

**7. மூன்றாம் ஆங்கிலேய – மைசூர் போரின் போது ஆங்கிலேய தலைமை ஆளுநர் ________.**

(அ) இராபர்ட் கிளைவ் (ஆ) வாரன் ஹேஸ்டிங்ஸ்

(இ) காரன்வாலிஸ் (ஈ) வெல்லெஸ்லி

**விடை : (இ) காரன்வாலிஸ்**

---

www.surabooks.com



**8. ஆங்கிலேயருடன் பசீன் உடன்படிக்கை செய்து கொண்டவர் _____.**

(அ) இரண்டாம் பாஜிராவ் (ஆ) தௌலத்ராவ் சிந்தியா

(இ) ஷாம்பாஜி போன்ஸ்லே (ஈ) ஷாயாஜி ராவ் கெய்க்வாட்

**விடை : (அ) இரண்டாம் பாஜிராவ்**

**9. மராத்திய பேரரசின் கடைசி பீஷ்வா _______.** (ஏப்ரல் 2024)

(அ) பாலாஜி விஸ்வநாத் (ஆ) இரண்டாம் பாஜிராவ்

(இ) பாலாஜி பாஜிராவ் (ஈ) பாஜிராவ்

**விடை : (ஆ) இரண்டாம் பாஜிராவ்**

**10. துணைப்படைத் திட்டத்தில் இணைத்துக் கொண்ட முதல் இந்திய சுதேச அரசு எது?**

(அ) அயோத்தி (ஆ) ஹைதராபாத்

(இ) உதய்பூர் (ஈ) குவாலியர் **விடை : (ஆ) ஹைதராபாத்**

## II. கோடிட்ட இடங்களை நிரப்புக.

**11.** அலிநகர் உடன்படிக்கை கையெழுத்திடப்பட்ட ஆண்டு _______. **விடை: 1757**

**12.** சிராஜ் உத் - தௌலாவின் தலைமை படைத் தளபதி ________. (ஏப்ரல் 2024)

**விடை: மீர் ஜாபர்**

**13.** இரண்டாம் கர்நாடகப் போருக்கான முக்கிய காரணம் ________.

**விடை: வாரிசுரிமை பிரச்சனை**

**14.** இந்தியாவில் பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தை விரிவுப்படுத்துவதற்காக வாரிசு இழப்புக் கொள்கையை கொண்டு வந்தவர் ________. **விடை: டல்ஹௌசி பிரபு**

**15.** திப்பு சுல்தானை இறுதியாக தோற்கடித்தவர் ________. **விடை: ஆர்தர் வெல்லெஸ்லி**

**16.** திப்பு சுல்தான் இறப்புக்கு பின் ________ வசம் மைசூர் ஒப்படைக்கப்பட்டது.

**விடை: மூன்றாம் கிருஷ்ண ராஜா உடையார்**

**17.** 1800 ஆம் ஆண்டு கல்கத்தாவில் உள்ள வில்லியம் கோட்டையில் ஒரு கல்லூரியை நிறுவியவர் _______. **விடை: வெல்லெஸ்லி பிரபு**

## III. பொருத்துக.

| | | | | விடைகள் |
|---|---|---|---|---|
| 1. | அய் - லா - சப்பேல் உடன்படிக்கை | - | முதல் ஆங்கிலேய மைசூர் போர் | **முதல் கர்நாடகப் போர்** |
| 2. | சால்பை உடன்படிக்கை | - | முதல் கர்நாடகப் போர் | **முதல் மராத்திய போர்** |
| 3. | பாரிஸ் உடன்படிக்கை | - | மூன்றாம் கர்நாடகப் போர் | **மூன்றாம் கர்நாடகப் போர்** |
| 4. | ஸ்ரீரங்கபட்டின உடன்படிக்கை | - | முதல் மராத்திய போர் | **மூன்றாம் ஆங்கிலேய மைசூர் போர்** |
| 5. | மதராஸ் உடன்படிக்கை | - | மூன்றாம் ஆங்கிலேய மைசூர் போர் | **முதல் ஆங்கிலேய மைசூர் போர்** |

enquiry@surabooks.com Ph:8124201000 / 8124301000

## IV. சரியா / தவறா எனக் குறிப்பிடுக.

1. அலிவர்திகான் மறைவுக்குப் பின்னர் சிராஜ்- உத்-தௌலா வங்காளத்தின் அரியணை ஏறினார். **விடை: சரி**

2. பிளாசிப் போரில் ஆங்கிலேயப் படையை வழி நடத்தியவர் ஹெக்டர் மன்றோ ஆவார். **விடை: தவறு**

3. ஐரோப்பாவில் வெடித்த ஆஸ்திரிய வாரிசுரிமைப் போர் இரண்டாம் கர்நாடகப் போருக்கு இட்டுச் சென்றது. **விடை: தவறு**

4. வங்காளத்தின் வில்லியம் கோட்டையில் உள்ள உச்ச நீதிமன்றத்தின் முதல் தலைமை நீதிபதி சர் எலிஜா இம்பே ஆவார். **விடை: சரி**

5. காரன் வாலிஸ் பிரபு காவல் துறையை உருவாக்கினார். (அரை. தேர்வு 2023, ஏப்ரல் 2024) **விடை: சரி**

## V. கீழ்க்காண்பவற்றுள் சரியாக பொருந்தியுள்ளது எது?

1. அடையாறு போர் - 1748
2. ஆம்பூர் போர் - 1754
3. வந்தவாசிப் போர் - 1760
4. ஆற்காட்டுப் போர் - 1749

**விடை: (3) வந்தவாசிப் போர் - 1760**

## VI. பின்வரும் வினாக்களுக்கு ஓரிரு வாக்கியங்களில் விடையளி.

**1. இருட்டறை துயரச் சம்பவம் பற்றி குறிப்பு வரைக.** (காலாண்டுத் தேர்வு 2023)

**விடை:** (i) சிராஜ் உத்-தௌலாவின் படை வீரர்கள் 146 ஆங்கிலேயர்களை சிறைப்பிடித்து கல்கத்தாவின் வில்லியம் கோட்டையில் காற்று புகாத ஒரு சிறிய இருட்டறையில் ஓர் இரவு முழுவதும் அடைத்து வைத்திருந்தனர்.

(ii) மறுநாள் காலை அறையை திறந்த போது அவர்களுள் 123 பேர் மூச்சு திணறி இறந்திருந்தனர். இது வரலாற்றில் இருட்டறை துயரச் சம்பவம் என்றழைக்கப்படுகிறது.

**2. பிளாசிப் போருக்குபின் ஆங்கிலேயர்கள் பெற்ற சலுகைகள் யாவை?**

**விடை:** (i) 1757ஆம் ஆண்டு பிளாசிப் போருக்குப் பின் வங்காளம், பீகார், ஒரிசா ஆகிய பகுதிகளில் ஆங்கிலேயர்கள் தடையில்லா வணிக உரிமை பெற்றனர்.

(ii) வங்காளத்தின் '24 பர்கானா' எனும் பகுதியை ஆங்கிலேயர் பெற்றனர்.

**3. பக்சார் போருக்கான காரணங்களை குறிப்பிடுக.**

**விடை: பக்சார் போருக்கான காரணங்கள் :**

(i) வங்காளத்தின் நவாப் மீர்காசிம் தஸ்தக் என்றழைக்கப்படும் சுங்கவரி விலக்கு ஆணையை தவறாக பயன்படுத்திய ஆங்கிலேயர் மீது கோபம் அடைந்து கலகத்தில் ஈடுபட்டார்.

(ii) ஆங்கிலேயர்களால் தோற்கடிக்கப்பட்ட அவர் அயோத்திகு சென்று சுஜா-உத்-தௌலா மற்றும் இரண்டாம் ஷா ஆலம் ஆகியோருடன் சேர்ந்து ஆங்கிலேயருக்கு எதிராக போரில் இறங்கினார்.



www.Surabooks.com

www.surabooks.com



**4. முதல் ஆங்கிலேய மைசூர் போருக்கான காரணங்கள் யாவை?**

விடை: **முதல் ஆங்கிலேய மைசூர் போருக்கான காரணங்கள் (1767 - 69):**

(i) ஹைதர் அலியின் வளர்ச்சி, அவர் பிரெஞ்சுகாரர்களிடம் கொண்டிருந்த நட்புறவு ஆகியன ஆங்கிலக் கிழக்கிந்திய கம்பெனியின் எதிர்ப்புக்கு காரணமாயின.

(ii) ஹைதர் அலிக்கு எதிராக மராத்தியர்கள், ஹைதராபாத் நிசாம், ஆங்கிலேயர்கள் இணைந்து முக்கூட்டணியை ஏற்படுத்தினர்.

**5. மூன்றாம் மராத்திய போரின் விளைவுகள் யாவை?**

விடை: **மூன்றாம் மராத்திய போரின் விளைவுகள்:**

(i) மராத்திய கூட்டமைப்புக் கலைக்கப்பட்டு பேஷ்வா பதவி ஒழிக்கப்பட்டது.

(ii) பேஷ்வா இரண்டாம் பாஜிராவின் பெரும்பாலான பகுதிகள் பம்பாய் மாகாணத்தோடு இணைக்கப்பட்டன.

(iii) மராத்திய பகுதிகளான நாக்பூர், இந்தூர் ஆகியவை ஆங்கிலேயர்களால் கையகப்படுத்தப்பட்டன.

(iv) மராத்தியரின் கடைசி பேஷ்வாவான இரண்டாம் பாஜிராவிற்கு வருடாந்திர ஓய்வூதியம் 8 லட்சம் ரூபாய் வழங்கப்பட்டது.

**6. துணைப்படைத் திட்டத்தில் கையெழுத்திட்ட நாடுகளின் பெயர்களை குறிப்பிடுக.**

விடை: **துணைப்படைத் திட்டத்தில் கையெழுத்திட்ட நாடுகள்:** (ஏப்ரல் 2025)

1. ஹைதராபாத் 2. தஞ்சாவூர் 3. அயோத்தி 4. பேஷ்வா
5. போன்ஸ்லே 6. குவாலியர் 7. இந்தூர் 8. ஜெய்பூர்
9. உதய்பூர் 10. ஜோத்பூர்

## VII. விரிவான விடையளி

**1. இரண்டாம் கர்நாடக போர் குறித்து ஒரு கட்டுரை எழுதுக.**

விடை: **இரண்டாம் கர்நாடக போர்**

**காரணங்கள்:**

(i) கர்நாடகம் மற்றும் ஹைதராபாத் ஆகிய பகுதிகளில் ஏற்பட்ட வாரிசுரிமை பிரச்சனையே இப்போருக்கு முக்கிய காரணமாக அமைந்தது.

(ii) இப்போர் மூலம் இந்தியாவில் தங்கள் ஆதிக்கத்தை நிலைநாட்ட ஆங்கிலேயர்களும், பிரெஞ்சுகாரர்களும் எண்ணினர்.

**ஆம்பூர் போர் (1749):**

(i) இதன் விளைவாக ஆகஸ்ட் 3, 1749இல் ஆம்பூரில் நடைபெற்ற போரில் பிரெஞ்சு கவர்னர் டியூப்ளே, சந்தா சாகிப், முசாபர் ஜங் ஆகியோரின் கூட்டுப் படைகளால் கர்நாடக நவாப் அன்வாருதீன் தோற்கடிக்கப்பட்டு கொல்லப்பட்டார்.

(ii) சந்தாசாகிப்பை பிரெஞ்சுக்காரர்கள் கர்நாடக நவாப் ஆக்கினர்.

(iii) நாசிர் ஜங்-ன் சகோதரர் சலபத் ஜங் பிரெஞ்சுப் படைத் தளபதி புஸ்ஸியின் உதவியுடன் ஹைதராபாத் நிசாம் ஆனார்.

**ஆற்காட்டுப் போர் (1751):**

(i) டியூப்ளே, முகமது அலி தஞ்சம் புகுந்த திருச்சி கோட்டையை முற்றுகையிட ஒரு படையை அனுப்பினார்.

www.surabooks.com



(ii) இம்முயற்சியில் சந்தா சாகிப்பும் (கர்நாடக நவாப்) தன்னை பிரெஞ்சுப் படைகளோடு இணைத்துக் கொண்டார்.

(iii) இச்சமயத்தில் ஆற்காட்டை இராபர்ட் கிளைவ் கைப்பற்றினார்.

(iv) அன்வருதீனின் மகன் முகமது அலி ஆங்கிலேயரின் உதவியுடன் ஆற்காட்டு நவாப் ஆனார்.

**பாண்டிச்சேரி உடன்படிக்கை (1755):**

(i) டியூப்ளேவைத் தொடர்ந்து பிரெஞ்சு ஆளுநராக பதவியேற்ற கோதேயூ ஆங்கிலேயருடன் பாண்டிச்சேரி உடன்படிக்கையை செய்து கொண்டார்.

(ii) இதன்படி இரு நாடுகளும் தங்கள் உள்நாட்டு விவகாரங்களில் தலையிடக் கூடாது எனவும், போருக்கு முன்னர் இருந்த பகுதிகள் அவரவரிடம் திரும்ப ஒப்படைக்கப்படும் என்றும், புதிய கோட்டைகள் கட்டக் கூடாது எனவும் கூறப்பட்டது.

(iii) இவ்வுடன்படிக்கை மூலம் ஆங்கிலேயர் மேலும் வலிமை பெற்றனர்.

---

**2. நான்காம் ஆங்கிலேய மைசூர் போர் பற்றி எழுதுக.**

விடை: **நான்காம் ஆங்கிலேய மைசூர் போர்:**

திப்பு சுல்தான், 1792இல் ஸ்ரீரங்கப்பட்டின உடன்படிக்கையின் மூலம் காரன்வாலிஸ் அவமரியாதை செய்யப்பட்டதை மறக்கவில்லை.

**காரணங்கள்:**

(i) திப்பு சுல்தானின் ஆங்கிலேயருக்கு எதிரான வெளிநாட்டு கூட்டணி.

(ii) ஸ்ரீரங்கப்பட்டின உடன்படிக்கையின் மூலம் காரன்வாலிஸ் பிரபுவால் ஏற்பட்ட அவமரியாதை.

(iii) பிரெஞ்சு மற்றும் நெப்போலியனுடனான திப்புவின் தொடர்பு.

**போரின் போக்கு:**

(i) 1799இல் வெல்லெஸ்லி பிரபு திப்புவின் மீது போர் தொடுத்தார்.

(ii) 1799 மே 4 ஆம் நாள் ஸ்ரீரங்கப்பட்டினம் கைப்பற்றப்பட்டது.

(iii) திப்பு சுல்தான் வீரதீரமாக போரிட்டாலும் இறுதியில் கொல்லப்பட்டார்.

(iv) மேலும் ஒட்டுமொத்த மைசூரும் ஆங்கிலேயர் முன்பாக சரணடைந்தது.

**போருக்கு பின் மைசூர் :**

(i) கனரா, வயநாடு, கோயமுத்தூர், தாராபுரம் ஆகிய பகுதிகளை ஆங்கிலேயர் இணைத்துக் கொண்டனர்.

(ii) மீண்டும் இந்து உயர் குடும்பத்தைச் சேர்ந்த மூன்றாம் கிருஷ்ண ராஜா உடையார் மைசூர் அரியணை ஏறினார்.

(iii) திப்புவின் குடும்பத்தினர் வேலூர் கோட்டைக்கு அனுப்பப்பட்டனர்.

---

**3. பிரிட்டிஷ் ஆட்சியை விரிவுபடுத்த டல்ஹௌசி பிரபு கொண்டு வந்த கொள்கையை பற்றி விவரி.**

விடை: **வாரிசு இழப்பு கொள்கை (1848) :**

(i) டல்ஹௌசி பிரபு இந்தியாவில் ஆங்கிலேயரின் ஆதிக்கத்தை உயர்த்துவதில் முதன்மை சிற்பியாக இருந்தார்.

(ii) ஆங்கிலேய பேரரசை விரிவுபடுத்துவதற்காக அவர் வாரிசு இழப்புக் கொள்கை என்ற புதிய கொள்கையை கொண்டு வந்தார்.

enquiry@surabooks.com Ph:8124201000 / 8124301000

www.surabooks.com



(iii) 1848 ஆம் ஆண்டு அவர் அறிவித்த இக்கொள்கையின் படி, சுதேச மன்னர்கள் ஆங்கிலேயரின் அனுமதி இன்றி வாரிசுகளை தத்தெடுக்க நேரிடும் போது, மன்னரின் சொத்துக்கள் தத்தெடுத்த பிள்ளைக்கும், மன்னரின் ஆட்சிப்பகுதி ஆங்கிலேயரின் தலையாசக்திக்கும் செல்ல நேரிடும் எனப்பட்டது.

(iv) இக்கொள்கையினை இந்தியர்கள் கடுமையாக எதிர்த்தனர்.

(v) 1857 ஆம் ஆண்டு பெரும் புரட்சிக்கு இக்கொள்கை மூல காரணமாக அமைந்தது.

**4. வெல்லெஸ்லி பிரபு எவ்வாறு ஆங்கிலேய ஆதிக்கத்தை இந்தியாவில் விரிவுபடுத்தினார்?**

**விடை:** (i) இந்தியாவில் இருந்த சுதேச அரசுகளை ஆங்கிலேயரின் கட்டுப்பாட்டில் கொண்டு வர வெல்லெஸ்லி பிரபுவால் அறிமுகப்படுத்தப்பட்ட திட்டமே துணைப்படைத்திட்டமாகும்.

(ii) இந்தியாவில் ஆங்கிலேய ஆட்சியை விரிவுபடுத்தவும் அரசியல் ஆதிக்கத்தை ஏற்படுத்தவும் இத்திட்டம் மிகச்சிறந்த கருவியாக பயன்படுத்தப்பட்டது.

(iii) படையெடுப்புகளிலிருந்து சுதேச அரசுகளை காப்பதும், உள்நாட்டு அமைதியை நிலைநாட்டுவதும் ஆங்கிலேயரின் கடமை என்ற நிலை உருவானது.

**துணைப்படைத்திட்டத்தின் முக்கிய அம்சங்கள்:**

(i) இத்திட்டத்தில் இணையும் இந்திய அரசர் தன்னுடைய படையை கலைத்துவிட்டு ஆங்கிலேயரரின் படையை ஏற்றுக் கொள்ள வேண்டும்.

(ii) சுதேச அரசின் தலைமையகத்தில் ஆங்கிலேயரின் பிரதிநிதி ஒருவர் இருப்பார்.

(iii) ஆங்கிலேயரின் படையை பராமரிக்கவும், படை வீரர்களின் ஆண்டுச் சம்பளம் வழங்குவதற்காகவும், நிரந்தரமாக சில பகுதிகளை அந்நாட்டு அரசர் ஆங்கிலேயருக்கு வழங்க வேண்டும்.

(iv) ஆங்கிலேயரைத் தவிர மற்ற ஐரோப்பிய அலுவலர்கள் அனைவரும் அந்நாட்டை விட்டு வெளியேற வேண்டும்.

(v) சுதேச நாட்டு அரசர் ஆங்கில கிழக்கிந்திய கம்பெனியின் அனுமதி பெற்ற பின்னரே அயல் நாடுகளுடன் ஒப்பந்தம் செய்து கொள்ள வேண்டும்.

(vi) அந்நிய அரசுகளின் தாக்குதல் மற்றும் உள்நாட்டு கலவரம் நடைபெறும் போது ஆங்கில கிழக்கிந்திய கம்பெனி அந்நாட்டை பாதுகாக்கும்.

## VIII. உயர் சிந்தனை வினா

**1. இந்தியாவில் ஆங்கில கிழக்கிந்திய கம்பெனியின் வெற்றிக்கான காரணங்களை விளக்குக.**

**விடை: ஆங்கிலேயர்கள் வெற்றி பெற்றதற்கான காரணங்கள்:**

(i) மிகப்பெரிய கடல்வலிமை

(ii) நெசவுத் தொழில் வளர்ச்சி

(iii) அறிவியல் ரீதியாக பிரிக்கப்பட்ட தொழிலாளர்கள்

(iv) பொருளாதார வளர்ச்சி மற்றும் ஆங்கிலேயரின் திறமைமிக்க இராஜதந்திரம்.

(v) இந்திய வணிகர்களிடையே நிலவிய பாதுகாப்பின்மை உணர்வுகள்.

(vi) இந்திய அரசர்களின் சமத்துவமின்மை மற்றும் அறியாமை.

enquiry@surabooks.com Ph:8124201000 / 8124301000


www.surabooks.com



## IX. வரைபட பயிற்சி

**இந்திய – நதிகள் வரைபடத்தில் கீழ்க்காணும் இடங்களை குறிப்பிடுக.**

1. பிளாசி 2. பக்சார் 3. புரந்தர் 4. ஆற்காடு 5. வந்தவாசி



www.surabooks.com



## கூடுதல் வினாக்கள்

### I. சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்.

**1. ஐரோப்பாவில் ஏற்பட்ட ஆஸ்திரிய வாரிசுரிமைப் போரில் பிரிட்டன் மற்றும் ______ எதிர் எதிர் அணிகளில் இருந்தன.**

(அ) பிரான்சு (ஆ) ஸ்பெயின் (இ) போர்ச்சுகல் (ஈ) டென்மார்க்

**விடை : (அ) பிரான்சு**

**2. கவுண்டி –லாலி கடலூரில் உள்ள ________ யை கைப்பற்றினார்.**

(அ) செயிண்ட் ஜார்ஜ் கோட்டை (ஆ) வில்லியம் கோட்டை
(இ) செயிண்ட் டேவிட் கோட்டை (ஈ) செங்கோட்டை

**விடை: (இ) செயிண்ட் டேவிட் கோட்டை**

**3. 1798 இல் இந்தியாவின் கவர்னர் ஜெனரலாக ________ பதவியேற்றுக் கொண்டார்.**

(அ) டல்ஹௌசி பிரபு (ஆ) வெல்லெஸ்லி பிரபு
(இ) லிட்டன் பிரபு (ஈ) சர் சார்லஸ் உட்

**விடை: (ஆ) வெல்லெஸ்லி பிரபு**

**4. ________ ஆம் ஆண்டு பிரிட்டிஷ் நாடாளுமன்றத்தால் இந்திய ஆட்சிப்பணி சட்டம் இயற்றப்பட்டது.**

(அ) 1861 (ஆ) 1561 (இ) 1671 (ஈ) 1871

**விடை: (அ) 1861**

**5. இந்திய அரசுச் சட்டம் இயற்றப்பட்ட ஆண்டு ________.**

(அ) 1858 (ஆ) 1758 (இ) 1856 (ஈ) 1857

**விடை: (அ) 1858**

### II. கோடிட்ட இடங்களை நிரப்புக.

**1.** 1757 ஆம் ஆண்டு பிளாசிப் போருக்குப் பின் __________, __________, __________ ஆகிய பகுதிகளில் ஆங்கிலேயர்கள் தடையில்லா வணிக உரிமை பெற்றனர்.

**விடை: வங்காளம், பீகார், ஒடிசா**

**2.** இராபர்ட் கிளைவ் வங்காளத்தில் ________ முறையை கொண்டு வந்தார்.

**விடை: இரட்டையாட்சி**

**3.** ஐரோப்பாவில் நடைபெற்ற ஏழாண்டுப் போர் ________ உடன்படிக்கையின்படி முடிவுக்கு வந்தது.

**விடை: பாரிசு**

**4.** 1761இல் ஹைதர் அலி ________ சமஸ்தானத்தின் உண்மையான ஆட்சியாளரானார்.

**விடை: மைசூர்**

**5.** இந்தியாவின் பிரிட்டிஷ் நிருவாகத்தின் இரண்டாவது முக்கியத் தூணாக விளங்கியது __________ ஆகும்.

**விடை: இராணுவம்**

**6.** இந்தியாவில் முதன்முதலில் காவல் துறையை உருவாக்கியவர் ________ ஆவார்.

**விடை: காரன்வாலிஸ் பிரபு**

**7.** வங்காளத்தின் வில்லியம் கோட்டையில் முதல் உச்ச நீதிமன்ற நீதிபதி ____________ ஆவார்.

**விடை: சர் எலிஜா இம்பே**

## III. பொருத்துக.

| | | | |
|---|---|---|---|
| 1. | பாண்டிச்சேரி உடன்படிக்கை | (i) | 1799 |
| 2. | மங்களூர் உடன்படிக்கை | (ii) | 1790-1792 |
| 3. | முதல் ஆங்கிலேய மைசூர் போர் | (iii) | 1780-1784 |
| 4. | இரண்டாம் ஆங்கிலேய மைசூர் போர் | (iv) | 1755 |
| 5. | மூன்றாம் ஆங்கிலேய மைசூர் போர் | (v) | 1784 |
| 6. | நான்காம் ஆங்கிலேய மைசூர் போர் | (vi) | 1767 - 1769 |

**விடை: 1-iv, 2-v, 3-vi 4-iii, 5-ii, 6-i**

## IV. சரியா, தவறா?

1. 1769ல் செய்து கொள்ளப்பட்ட உடன்படிக்கையை ஆங்கிலேயர்கள் நிறைவேற்றத் தவறினர். **விடை: சரி**
2. ஹைதர் அலியின் வளர்ச்சி அவர் பிரெஞ்சுக்காரர்களிடம் கொண்டிருந்த நட்புறவு ஆகியன ஆங்கில கிழக்கிந்திய கம்பெனியின் நட்புக்கு காரணமாயின. **விடை: தவறு**
3. இந்தியாவில் ஆங்கிலேய கிழக்கிந்திய கம்பெனி தலையாய சக்தியாக மாறத் தொடங்கியது. **விடை: சரி**
4. சுதேச அரசின் தலைமையகத்தில் இந்தியரின் பிரதிநிதி ஒருவர் இருப்பார்.**விடை: தவறு**
5. அலிநகர் உடன்படிக்கை 1756 பிப்ரவரி 9 ஆம் நாள் கையெழுத்திடப்பட்டது. **விடை: தவறு**

## V. குறுகிய வினாக்களுக்கு ஓரிரு வார்த்தையில் விடையளி.

**1. இந்தியா வருவதற்கான புதிய கடல்வழியை கண்டுபிடித்தவர் யார்?**

**விடை:** 1498 ஆம் ஆண்டு போர்ச்சுகல் நாட்டைச் சேர்ந்த மாலுமி வாஸ்கோடகாமா ஐரோப்பாவிலிருந்து இந்தியா வருவதற்கான புதிய கடல்வழியை கண்டுபிடித்தார்.

**2. கர்நாடகப் போர்கள் என்றால் என்ன?**

**விடை:** 18ஆம் நூற்றாண்டில் மூன்று கர்நாடகப் போர்கள் பல்வேறு இந்திய ஆட்சியாளர்களிடையே நடைபெற்றது. இதில் ஆங்கில கிழக்கிந்திய கம்பெனியும், பிரெஞ்சு கிழக்கிந்திய கம்பெனியும் எதிர்எதிர் அணியில் இருந்தது. தென்னிந்தியாவின் கர்நாடக பகுதியில் போர் நடைபெற்றது. அவை கர்நாடகப் போர்கள் எனப்படுகின்றன. இவை 1746 முதல் 1763 வரை நடைபெற்றது.

**3. ஐசிஎஸ் தேர்வில் தேர்ச்சி பெற்ற முதல் இந்தியர் யார்?**

**விடை:** 1863இல் ஐசிஎஸ் தேர்வில் தேர்ச்சி பெற்ற முதல் இந்தியர் சத்தியேந்திரநாத் தாகூர். இவர் கவிஞர் இரபீந்தரநாத் தாகூரின் மூத்த சகோதரர் ஆவார்.

**4. மதராஸ் உயர்நீதிமன்றத்தின் முதல் இந்திய தலைமை நீதிபதி யார்?**

**விடை:** மதராஸ் உயர்நீதிமன்றத்தின் முதல் இந்திய தலைமை நீதிபதி சர் திருவாரூர் முத்துசாமி ஆவார்.

**5. வாரிசு இழப்புக் கொள்கையின் மூலம் டல்ஹௌசி பிரபு இணைத்துக் கொண்ட பகுதிகள் எவை?**

**விடை:** சதாரா (1848). ஜெய்த்பூர், சம்பல்பூர் (1849), பகத் (1850), உதய்பூர் (1852), ஜான்சி (1853) மற்றும் நாக்பூர் (1854).



www.surabooks.com

## VI. விரிவான விடையளி :

**1. இந்தியாவில் ஆங்கிலேயரின் நிர்வாக அமைப்பின்கீழ் நீதித்துறை எவ்வாறு இருந்தது.**

விடை: (i) 1772 இல் இரட்டை ஆட்சி முறை ஒழிக்கப்பட்டு வரிவசூல் செய்வதையும், நீதி வழங்கும் அதிகாரத்தையும் ஆங்கிலக் கிழக்கிந்திய கம்பெனி ஏற்றுக் கொண்டது.

(ii) அதன் விளைவாக சிவில் நீதிமன்றம் என்றழைக்கப்பட்ட திவானி அதாலத் மற்றும் குற்றவியல் நீதிமன்றம் என்றழைக்கப்பட்ட பௌஜ்தாரி அதாலத் ஆகியன ஏற்படுத்தப்பட்டன.

(iii) 1773ஆம் ஆண்டு ஒழுங்கு முறைச் சட்டத்தின்படி கல்கத்தாவில் ஒரு உச்சநீதிமன்றம் அமைக்கப்பட்டது. இந்நீதிமன்றம் சிவில், குற்றவியல், திருச்சபை மற்றும் பிரத்தியோக வழக்குகளை விசாரித்தது.

(iv) கல்கத்தாவில் உள்ள உச்ச நீதிமன்றத்தின் மாதிரியில் 1801இல் மதராஸிலும், 1823இல் பம்பாயிலும் உச்ச நீதிமன்றங்கள் நிறுவப்பட்டன. 1832இல் வில்லியம் பெண்டிங் பிரவு ஜூரி (நீதி அதிகார முறை) முறையை வங்காளத்தில் கொண்டு வந்தார்.

(v) நாடு முழுவதும் சட்டத்தின் ஆட்சி நடைமுறைப்படுத்தப்பட்டது. 1861ஆம் ஆண்டு இந்திய உயர்நீதி மன்ற சட்டத்தின்படி கல்கத்தா, பம்பாய், மதராஸ் ஆகிய இடங்களில் பழைய உச்சநீதிமன்றங்களுக்குப் பதிலாக மூன்று உயர் நீதிமன்றங்கள் ஏற்படுத்தப்பட்டன.

---

**2. மூன்றாம் கர்நாடகப் போர் குறித்து ஒரு பக்க அளவில் எழுதுக.**

விடை: (i) ஐரோப்பாவில் வெடித்த ஏழாண்டுப் போர் இந்தியாவில் மூன்றாம் கர்நாடகப் போருக்கு இட்டுச் சென்றது.

(ii) இப்போரில் பிரெஞ்சு படைகளை வழி நடத்த கவுண்-டி-லாலியை பிரெஞ்சு அரசாங்கம் நியமித்தது. அவர் கடலூரில் உள்ள செயிண்ட் டேவிட் கோட்டையை எளிதாக கைப்பற்றினார்.

(iii) புஸ்ஸி ஐதராபாத்திலிருந்து புறப்பட்ட தருணத்தை பயன்படுத்தி வட சர்க்கார் (ஆந்திர பிரதேசம், ஒடிசா) பகுதிகளை கைப்பற்ற கர்னல் போர்டை வங்கத்திலிருந்து இராபர்ட் கிளைவ் அனுப்பினார்.

**வந்தவாசிப்போர் (1760)**

(i) 1760 ஜனவரி 22ல் நடைபெற்ற இப்போரில் ஜெனரல் அயர் கூட் தலைமையிலான ஆங்கிலேயப் படை லாலி தலைமையிலான பிரெஞ்சுப் படையை முற்றிலும் தோற்கடித்தது.

(ii) கவுண்டிலாலி பிரான்சு நாட்டுக்கு திரும்ப அழைக்கப்பட்டு சிறையிலிடப்பட்டு, பின்னர் தூக்கிலிடப்பட்டார்.

**பாரிஸ் உடன்படிக்கை (1763)**

(i) ஐரோப்பாவில் நடைபெற்ற ஏழாண்டுப் போர் பாரிசு உடன்படிக்கையின் படி முடிவுக்கு வந்தது. அதன்படி பாண்டிச்சேரி உட்பட இந்தியாவிலிருந்த பிரெஞ்சு குடியேற்றங்கள் அனைத்தும் பிரெஞ்சுக்காரர்கள் வசம் திரும்ப கொடுக்கப்பட்டது.

(ii) ஆனால், அவர்கள் தங்கள் பகுதிகளை பலப்படுத்தவும், படைகளை பெருக்கவும் தடைவிதிக்கப்பட்டது. இதன் மூலம் பிரெஞ்சு ஆதிக்கம் இந்தியாவில் முடிவுக்கு கொண்டு வரப்பட்டது.

☆☆☆

www.surabooks.com



# அலகுத் தேர்வு

**காலம் : 60 நிமிடங்கள்** **மதிப்பெண்கள்: 25**

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்.** (3 × 1 = 3)

**1. பிளாசிப் போர் நடைபெற்ற ஆண்டு**

(அ) 1757 (ஆ) 1764 (இ) 1765 (ஈ) 1775

**2. 1798 ல் இந்தியாவின் கவர்னர் ஜெனரலாக ________ பதவியேற்றுக் கொண்டார்.**

(அ) டல்ஹௌசி பிரபு (ஆ) வெல்லெஸ்லி பிரபு
(இ) லிட்டன் பிரபு (ஈ) சர் சார்லஸ் உட்

**3. இந்திய அரசுச் சட்டம் இயற்றப்பட்ட ஆண்டு ________.**

(அ) 1858 (ஆ) 1758 (இ) 1856 (ஈ) 1857

**II. கோடிட்ட இடங்களை நிரப்புக.** (3 × 1 = 3)

**1.** இரண்டாம் கர்நாடகப் போருக்கான முக்கிய காரணம் _____.

**2.** திப்பு சுல்தானை இறுதியாக தோற்கடித்தவர் _____.

**3.** இந்தியாவில் முதன்முதலில் காவல் துறையை உருவாக்கியவர் __________ ஆவார்.

**III. பொருத்துக.** (4 × 1 = 4)

| | | | |
|---|---|---|---|
| 1. | சால்பை உடன்படிக்கை | (i) | மூன்றாம் ஆங்கிலேய மைசூர் போர் |
| 2. | பாரிசு உடன்படிக்கை | (ii) | முதல் ஆங்கிலேய மைசூர் போர் |
| 3. | ஸ்ரீரங்கபட்டின உடன்படிக்கை | (iii) | ஏழாண்டுப் போர் |
| 4. | மெட்ராஸ் உடன்படிக்கை | (iv) | முதல் மராத்திய போர் |

**IV. சரியா? தவறா?** (2 × 1 = 2)

**1.** பிளாசிப் போரில் ஆங்கிலேயப் படையை வழி நடத்தியவர் ஹெக்டர் மன்றோ ஆவார்.

**2.** வங்காளத்தின் வில்லியம் கோட்டையில் உள்ள உச்ச நீதிமன்றத்தின் முதல் தலைமை நீதிபதி சர் எலிஜா இம்பே ஆவார்.

**V. ஓரிரு வாக்கியங்களில் விடையளி.** (4 × 2 = 8)

**3.** பக்சார் போருக்கான காரணங்களை குறிப்பிடுக.

**3.** கர்நாடகப் போர்கள் என்றால் என்ன?

**4.** வாரிசு இழப்புக் கொள்கையின் மூலம் டல்ஹௌசி பிரபு இணைத்துக் கொண்ட பகுதிகள் எவை?

**5.** மூன்றாம் மராத்திய போரின் விளைவுகள் யாவை?

**VI. விரிவான விடையளிக்கவும்.** (1 × 5 = 5)

**1.** பிரிட்டிஷ் ஆட்சியை விரிவுபடுத்த டல்ஹௌசி பிரபு கொண்டு வந்த கொள்கையை பற்றி விவரி.

## விடைகள்

I. **1.** (அ) 1757 **2.** (ஆ) வெல்லெஸ்லி பிரபு **3.** (அ) 1858

II. **1.** வாரிசுரிமை பிரச்சினை **2.** வெல்லெஸ்லி **3.** காரன்வாலிஸ் பிரபு

III. 1-iv, 2-iii, 3-ii, 4-i

IV. **1.** தவறு **2.** சரி

V. **1.** பார்க்க சுராவின் கையேடு VI-3 **2.** பார்க்க சுராவின் கையேடு V-2 (கூடுதல்)
**3.** பார்க்க சுராவின் கையேடு V-5 (கூடுதல்) **4.** பார்க்க சுராவின் கையேடு VI-5

VI. **1.** பார்க்க சுராவின் கையேடு VII-3

☆☆☆

# அலகு 3

# கிராம சமூகமும் வாழ்க்கை முறையும்

## மதிப்பீடு

### I. சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்.

1. ஜாகீர்தாரி, மல்குஜாரி, பிஸ்வேதாரி போன்ற பல்வேறு பெயர்களால் அழைக்கப்படும் நிலவரி முறை எது?

(அ) மகல்வாரி முறை (ஆ) இரயத்துவாரி முறை
(இ) ஜமீன்தாரி முறை (ஈ) இவற்றில் எதுவுமில்லை

**விடை : (ஈ) இவற்றில் எதுவுமில்லை**

2. எந்த கவர்னர் –ஜெனரலின் காலத்தில், வங்காளத்தில் நிரந்தர நிலவரித் திட்டம் செய்து கொள்ளப்பட்டது?

(அ) ஹேஸ்டிங்ஸ் பிரபு (ஆ) காரன்வாலிஸ் பிரபு
(இ) வெல்லெஸ்லிபிரபு (ஈ) மிண்டோ பிரபு

**விடை : (ஆ) காரன்வாலிஸ் பிரபு**

3. மகல்வாரி முறையில் 'மகல்' என்றால் என்ன? (காலாண்டுத் தேர்வு 2023)

(அ) வீடு (ஆ) நிலம் (இ) கிராமம் (ஈ) அரண்மனை

**விடை : (இ) கிராமம்**

4. மகல்வாரி முறை எந்தப் பகுதியில் செய்துகொள்ளப்பட்டது?

(அ) மகாராஷ்டிரா (ஆ) மதராஸ் (இ) வங்காளம் (ஈ) பஞ்சாப்

**விடை : (ஈ) பஞ்சாப்**

5. கீழ்க்காணும் கவர்னர்களுள் மகல்வாரி முறையை அறிமுகப்படுத்தியவர் யார்?

(அ) ஹேஸ்டிங்ஸ் பிரபு (ஆ) காரன்வாலிஸ் பிரபு
(இ) வெல்லெஸ்லி பிரபு (ஈ) வில்லியம் பெண்டிங் பிரபு

**விடை : (ஈ) வில்லியம் பெண்டிங் பிரபு**

6. ஆங்கிலேயரால் இரயத்துவாரி முறை அறிமுகப்படுத்தப்படாத பகுதி எது?

(அ) பம்பாய் (ஆ) மதராஸ்
(இ) வங்காளம் (ஈ) இவற்றில் எதுவுமில்லை

**விடை : (இ) வங்காளம்**

7. இண்டிகோ (அவுரி) கிளர்ச்சி யாரால் தலைமையேற்று நடத்தப்பட்டது?

(அ) மகாத்மா காந்தி (ஆ) கேசப் சந்திர ராய்
(இ) திகம்பர் பிஸ்வாஸ் மற்றும் பிஸ்னு பிஸ்வாஸ்
(ஈ) சர்தார் வல்லபாய் பட்டேல் **விடை : (இ) திகம்பர் பிஸ்வாஸ் மற்றும் பிஸ்னு பிஸ்வாஸ்**



www.surabooks.com

**8. பர்தோலி சத்தியாகிரகம் யார் தலைமையில் நடத்தப்பட்டது?**

(அ) சர்தார் வல்லபாய் பட்டேல் (ஆ) மகாத்மா காந்தி
(இ) திகம்பர் பிஸ்வாஸ் (ஈ) கேசப் சந்திர ராய்

**விடை : (அ) சர்தார் வல்லபாய் பட்டேல்**

## II. கோடிட்ட இடங்களை நிரப்புக.

1. _______ என்பது ஜமீன்தார் முறையின் திருத்தப்பட்ட முறையாகும். **விடை: மகல்வாரி**
2. மகல்வாரி முறை _______ என்பவரின் சிந்தனையில் உதித்த திட்டம் ஆகும். **விடை: ஹோல்ட் மெகன்சி**
3. இண்டிகோ (அவுரி) கிளர்ச்சி _______ ல் நடைபெற்றது. (காலாண்டுத் தேர்வு 2023) **விடை: வங்காளத்தில்**
4. மாப்ளா கலகம் _______ ல் நடைபெற்றது. **விடை: ஆகஸ்ட் 1921**
5. 'சம்பரான் விவசாயச் சட்டம்' நிறைவேற்றப்பட்ட ஆண்டு _______. **விடை: மே 1918**

## III. பொருத்துக.

| | | | விடைகள் |
|---|---|---|---|
| 1. | நிரந்தர நிலவரித் திட்டம் | மதராஸ் | வங்காளம் |
| 2. | மகல்வாரி முறை | இண்டிகோ விவசாயிகளின் துயரம் | வடமேற்கு மாகாணம் |
| 3. | இரயத்துவாரி முறை | வடமேற்கு மாகாணம் | மதராஸ் |
| 4. | நீல் தர்பன் | வங்காளம் | இண்டிகோ விவசாயிகளின் துயரம் |
| 5. | சந்தால் கலகம் | முதல் விவசாயிகள் கிளர்ச்சி | முதல் விவசாயிகள் கிளர்ச்சி |

## IV. சரியா / தவறா எனக் குறிப்பிடுக.

1. வாரன் ஹேஸ்டிங்ஸ் ஐந்தாண்டு நிலவரித் திட்டத்தை அறிமுகப்படுத்தினார். **விடை: சரி**
2. இரயத்துவாரி முறை, தாமஸ் மன்றோவால் அறிமுகப்படுத்தப்பட்டது. **விடை: சரி**
3. குஜராத்தின் யூசுப்ஷாகி என்ற பர்கானாவில் பாப்னா கலகம் ஏற்பட்டது. **விடை: தவறு**
4. "பஞ்சாப் நில உரிமை மாற்று சட்டம்" 1918இல் நிறைவேற்றப்பட்டது. (ஏப்ரல் 2025) **விடை: தவறு**

## V. பின்வரும் கூற்றினை ஆராய்ந்து சரியானவற்றை (✓) செய்க.

**1. கீழ்க்காண்பனவற்றுள் எந்த ஒன்று ஜமீன்தாரி முறைப் பற்றிய தவறான கூற்றாகும்.**

(அ) இந்த முறை 1793இல் அறிமுகப்படுத்தப்பட்டது.
(ஆ) ஜமீன்தார்கள் நிலத்தின் உரிமையாளர் ஆவர்.
(இ) விவசாயிகளுக்கு இந்த முறையில் ஒரு குறிப்பிட்ட வருவாய் நிலையாக கிடைத்தது.
(ஈ) இந்தியாவின் மொத்த நிலப்பரப்பில் 19% நிலப்பரப்பில் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தது.

**விடை: (இ) விவசாயிகளுக்கு இந்த முறையில் ஒரு குறிப்பிட்ட வருவாய் நிலையாக கிடைத்தது.**

www.surabooks.com



**2. கீழ்க்காண்பனவற்றுள் இந்தியாவில் நடைபெற்ற விவசாயப் புரட்சி பற்றிய சரியான கூற்று எது?**

(அ) சந்தால் கலகம் வங்காளத்தில் நடைபெற்றது.

(ஆ) நீல் தர்பன் என்ற நாடகம் தீன பந்து மித்ராவால் எழுதப்பட்டது.

(இ) தக்காணக் கலகம் 1873இல் பூனாவில் உள்ள கிராமம் ஒன்றில் துவங்கியது.

(ஈ) மாப்ளா கலகம் தமிழகத்தில் நடைபெற்றது.

**விடை: (ஆ) நீல் தர்பன் என்ற நாடகம் தீன பந்து மித்ராவால் எழுதப்பட்டது**

## VI. பின்வரும் வினாக்களுக்கு ஓரிரு வாக்கியங்களில் விடையளி.

**1. நிரந்தர நிலவரி திட்டத்தின் சிறப்புக்கூறுகள் ஏதேனும் இரண்டினை குறிப்பிடுக.**

**விடை:** (i) ஜமீன்தார்கள் நில உடைமையாளர்களாக அங்கீகரிக்கப்பட்டனர்.

(ii) விவசாயிகளிடமிருந்து வரியை வசூல் செய்யும் அரசின் முகவர்களாக ஜமீன்தார்கள் செயல்பட்டனர்.

**2. இரயத்துவாரி முறையின் சிறப்புக் கூறுகள் யாவை?** (காலாண்டுத் தேர்வு 2023, )

**விடை: இரயத்துவாரி முறையின் சிறப்புக் கூறுகள்:** (ஏப்ரல் 2025)

(i) வருவாய் ஒப்பந்தம் நேரடியாக விவசாயிகளுடன் செய்து கொள்ளப்பட்டது.

(ii) நில அளவு மற்றும் விளைச்சலின் மதிப்பீடு கணக்கிடப்பட்டன.

(iii) அரசு, விளைச்சலில் 45லிருந்து 50 சதவீதம் வரை வரியாக நிர்ணயம் செய்தது.

**3. மகல்வாரி முறையின் விளைவுகளைக் கூறுக.**

**விடை: மகல்வாரி முறையால் ஏற்பட்ட விளைவுகள்:**

(i) கிராமத் தலைவர், சலுகைகளை தமது சொந்த விருப்பங்களின் அடிப்படையில் தவறாகப் பயன்படுத்தினர்.

(ii) இம்முறையானது விவசாயிகளுக்கு இலாபகரமானதாக இல்லை.

(iii) இம்முறையானது கிராமத்தின் உயர் வகுப்பினருக்கு இலாபகரமானதாக அமைந்தது.

**4. 1859-60இல் நடைபெற்ற இண்டிகோ (அவுரி) கலகத்திற்கு காரணம் என்ன?**

**விடை: 1859-60ல் நடைபெற்ற இண்டிகோ (அவுரி) கலகத்திற்கு காரணம்:**

(i) இண்டிகோவை வளர்ப்பதற்கு குத்தகை விவசாயிகளை கட்டாயப்படுத்தினர்.

(ii) மேலும் குத்தகை விவசாயிகள் தாங்கள் விளைவிக்கும் அவுரியை தங்களுக்கு குறைந்த விலைக்கு விற்கும்படியும் குத்தகை முன்பணத்தை முன்கூட்டியே பெற்று கொள்ளும்படியும் வற்புறுத்தப்பட்டனர்.

**5. சம்பரான் சத்தியாகிரகத்தில் மகாத்மா காந்தியின் பங்கினை குறிப்பிடுக.**

**விடை:** (i) விவசாயிகளின் பிரச்சினையை அறிந்து கொண்ட மகாத்மா காந்தி அவர்களுக்கு உதவ முன்வந்தார்.

(ii) அரசு ஒரு விசாரணைக் குழுவை அமைத்து, மகாத்மா காந்தியை அக்குழுவின் ஓர் உறுப்பினராக சேர்த்துக் கொண்டது.

(iii) விவசாயிகளின் குறைகள் விசாரிக்கப்பட்டு இறுதியில், மே, 1918இல் "சம்பரான் விவசாயச்சட்டம்" நிறைவேற்றப்பட்டது.

www.surabooks.com



**6. பர்தோலி சத்தியாகிரகத்தில் வல்லபாய் பட்டேலின் பங்கு பற்றி எழுதுக.**

விடை: **பர்தோலி சத்தியாகிரகத்தில் வல்லபாய் பட்டேலின் பங்கு:**

(i) 1928இல் 30 சதவீதம் அளவிற்கு அரசு நிலவருவாயை உயர்த்தியது.

(ii) அதனால் பர்தோலி (குஜராத்) விவசாயிகள் சர்தார் வல்லபாய் பட்டேல் தலைமையில் தங்களது எதிர்ப்பினை தெரிவித்தனர்.

(iii) விவசாயிகள் உயர்த்தப்பட்ட நிலவரியை செலுத்த மறுப்பு தெரிவித்து பிப்ரவரி 12, 1928,ல் வரிகொடா இயக்கத்தைத் தொடங்கினர். இதில் பல பெண்களும் கலந்து கொண்டனர்.

## VII. விரிவான விடையளி.

**1. நிலையான நிலவரித் திட்டத்தின் நிறை, குறைகளை விவாதிக்க.**

(காலாண்டு, அரையாண்டுத் தேர்வு 2023; ஏப்ரல் 2024)

விடை: **நிலையான நிலவரி திட்டத்தின் நிறைகள் :**

(i) தரிசு நிலங்கள் மற்றும் காடுகள் விவசாய நிலங்களாக மாற்றப்பட்டன.

(ii) ஜமீன்தார்கள் நிலத்தின் உரிமையாளராயினர்.

(iii) ஜமீன்தார்கள் ஆங்கில அரசுக்கு நம்பிக்கைக்குரியவர்களாக மாறினர்.

(iv) ஆங்கில அரசுக்கு நிலையான வருவாயை கிடைப்பதை உறுதி செய்தது.

(v) நீதி வழங்கும் பொறுப்பிலிருந்து ஜமீன்தார்கள் விடுவிக்கப்பட்டனர்.

**குறைகள் :**

(i) ஆங்கிலேய அரசு விவசாயிகளுடன் நேரடியாக தொடர்பு கொள்ளவில்லை.

(ii) விவசாயிகளின் உரிமைகள் மறுக்கப்பட்டதோடு, ஜமீன்தார்களின் பொறுப்பில் விடப்பட்டனர்.

(iii) விவசாயிகள் பெரும்பாலும் அடிமைகளாகவே நடத்தப்பட்டனர்.

(iv) இந்த திட்டத்தினால் ஜமீன்தார்கள் சோம்பேறிகளாகவும், ஆடம்பரப் பிரியர்களாகவும் மாறினர்.

(v) வங்காளத்தில் பல கிராமப்புறங்களில் ஜமீன்தார்களுக்கும், விவசாயிகளுக்குமிடையே பல மோதல்கள் ஏற்பட்டன.

**2. ஆங்கிலேயர்களின் நிலவரி திட்டங்கள் இந்திய விவசாயிகள் மீது ஏற்படுத்திய தாக்கங்கள் என்ன?** (ஏப்ரல் 2025)

விடை: **ஆங்கியேலர்களின் நிலவரி திட்டங்கள் இந்திய விவசாயிகள் மீது ஏற்படுத்திய தாக்கங்கள்:**

(i) அனைத்து நிலவரி முறைகளும் பொதுவாக, நிலத்திலிருந்து அதிகபட்ச வருமானம் பெறுவதாகவே இருந்தது.

(ii) இதனால் நிலவிற்பனை அதிகரிப்பு மற்றும் விவசாயத் தொழில் அழிவிற்கு வழிவகுத்தது.

(iii) விவசாயிகள் அதிக வரிவிதிப்பினால் பாதிக்கப்பட்டனர். அதிக வரிச்சுமை மற்றும் பஞ்சத்தினால் மக்கள் வறுமையாலும், கடன் சுமையாலும் அவதிப்பட்டனர்.

(iv) இதனால் விவசாயிகள் நிலத்தை விலைக்கு வாங்குவோர் மற்றும் வட்டிக்குப் பணம் தருபவர்களை தேடிச் சென்றனர். அவர்கள் விவசாயிகளிடமிருந்த நிலத்தை விலைக்கு வாங்கி பெரும் செல்வந்தர்களாயினர்.

enquiry@surabooks.com Ph:8124201000 / 8124301000

(v) ஜமீன்தார்கள், வட்டிக்காரர்கள், வழக்கறிஞர்கள் ஆகியோர்களால் ஏழை விவசாயிகள் சுரண்டப்பட்டனர். ஆங்கிலேய இறக்குமதி பொருட்களால் இந்தியக் குடிசைத் தொழில்கள் மறைந்தன.

(vi) நிலத்தின் உண்மையான, உரிமையாளர்களாகவும், உற்பத்தியின் பெரும் பங்குதாரர்களாகவும் இருந்த விவசாயிகளுடைய உழைப்பின் பலனானது ஆங்கிலேயரின் கொள்கையால், ஒரு குறிப்பிட்ட சலுகையை பெற்ற சமுதாயத்திற்கு மட்டுமே நன்மையளிப்பதாக இருந்தது.

**3. மாப்ளா கிளர்ச்சி பற்றி ஒரு பத்தியில் எழுதுக.**

விடை: **மாப்ளா கிளர்ச்சி (1921) :**

(i) மாப்ளா என்று அழைக்கப்பட்ட முஸ்லீம் விவசாயிகள் (கேரளா), இந்து ஜமீன்தார்கள் (ஜென்மிஸ்) மற்றும் ஆங்கில அரசால் அடக்கப்பட்டு சுரண்டப்பட்டனர்.

(ii) இதுவே இப்புரட்சிக்கு முதன்மைக் காரணமாக இருந்தது.

(iii) ஏப்ரல் 1920இல் நடைபெற்ற மலபார் மாவட்ட மாநாட்டின் மூலம் மாப்ளா விவசாயிகள் உத்வேகம் அடைந்தனர்.

(iv) ஆகஸ்டு 1921இல் மாப்ளா விவசாயிகள், ஜமீன்தார்களின் அடக்குமுறைக்கு எதிராகக் கிளர்ச்சியில் ஈடுபட்டனர். கிளர்ச்சியின் ஆரம்பத்தில் மாப்ளா விவசாயிகள் காவல் நிலையங்கள், பொது அலுவலகங்கள், செய்தித் தொடர்பு சாதனங்கள், அடக்கு முறையில் ஈடுபட்ட நிலக்கிழாரின் வீடுகள், வட்டிக்கடைக்காரர்கள் உட்பட அனைவரையும் தாக்கினர்.

(v) ஆனால், 1921 டிசம்பர் வாக்கில் அரசு இரக்கமின்றி மாப்ளா கிளர்ச்சியை அடக்கியது. அரசின் அதிகாரப்பூர்வ மதிப்பீட்டின்படி, அரசு தலையீட்டின் விளைவாக 2337 மாப்ளா கிளர்ச்சியாளர்கள் கொல்லப்பட்டனர். 1650 பேர் காயம் அடைந்தனர் மற்றும் 45,000க்கும் மேற்பட்டோர் சிறை பிடிக்கப்பட்டனர்.

## VIII. உயர் சிந்தனை வினா.

**வரிகள் மட்டும் அல்லாமல் வேறு எந்த வகைகளில் ஆங்கிலேயர்கள் இந்திய விவசாயிகளின் நிலங்களை சுரண்டினர்?**

விடை: வரிகளைத் தவிர, ஆங்கிலேயர்கள் வணிகமயமாக்கல் கொள்கையை பின்பற்றினர். இது இந்திய விவசாயிகளுக்கு ஒரு பெரிய பின்னடைவாக இருந்தது. மண் வளத்தை சீர்குலைக்கும் பணப்பயிர்களான ஓபியம் போன்ற பயிர்களை பயிரிட கட்டாயப்படுத்தப்பட்டனர். சணல், இண்டிகோ போன்ற விளைப்பொருட்களின் விலை 31% வரை உயர்ந்தன. ஆதலால் ஆங்கிலேயர்கள் இந்த பயிர்களை வளர்க்காத விவசாயிகளை அச்சுறுத்தினர். மேலும் அவர்களின் நிலங்களை பறித்தனர்.

## கூடுதல் வினாக்கள்

## I. சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்.

**1. ________ முறை 1820இல் தாமஸ்மன்றோ மற்றும் கேப்டன் ரீட் என்பவர்களால் அறிமுகப்படுத்தப்பட்டது.**

(அ) இரயத்துவாரி (ஆ) நிலையான நிலவரி

(இ) மகல்வாரி (ஈ) ஜமீன்தாரி **விடை : (அ) இரயத்துவாரி**

**2. _____மற்றும்_____ஆம் நூற்றாண்டுகளில், விவசாயிகள் ஆங்கிலேயர்களுக்கும் ஜமீன்தார்களுக்கும் எதிராக பல கலகங்களில் ஈடுபட்டனர்.**

(அ) 20 மற்றும் 21 (ஆ) 19 மற்றும் 20
(இ) 21 மற்றும் 22 (ஈ) 18 மற்றும் 19

**விடை: (ஆ) 19 மற்றும் 20**

**3. 1855-56இல் விவசாயிகளின் எழுச்சியாகக் கருதப்பட்ட முதலாவது கலகம் ________ ஆகும்.**

(அ) தக்காண கலகம்
(ஆ) பாப்னா கலகம்
(இ) சந்தால் கலகம்
(ஈ) இண்டிகோ கலகம்

**விடை: (இ) சந்தால் கலகம்**

**4. அவுரி ஆணையம் அமைக்கப்பட்ட வருடம் ________.**

(அ) 1862 (ஆ) 1860
(இ) 1865 (ஈ) 1868

**விடை: (ஆ) 1860**

**5. மலபார் மாவட்ட மாநாடு ________ ல் நடைபெற்றது.**

(அ) 1820 (ஆ) 1825
(இ) 1920 (ஈ) 1922

**விடை: (இ) 1920**

**6. பூனா மாவட்டத்தில் உள்ள விவசாயிகள் 1875 ஆம் ஆண்டு ஈடுபட்ட கலகம் _______ .**

(அ) தக்காண கலகம்
(ஆ) மாப்ளா கிளர்ச்சி
(இ) இண்டிகோ கலகம்
(ஈ) பாப்னா கலகம்

**விடை: (அ) தக்காண கலகம்**

**7. வரிகொடா இயக்கம் தொடங்கப்பட்ட ஆண்டு ________.**

(அ) 1938 (ஆ) 1928
(இ) 1930 (ஈ) 1935

**விடை: (ஆ) 1928**

## II. கோடிட்ட இடங்களை நிரப்புக.

1. ராஜ்மகால் குன்றுகளுக்கு அருகிலிருந்த நிலங்கள் _______ பயிரிடப்பட்டன.
**விடை: சந்தால்களால்**

2. 1937இல் _______ ஆட்சிக்கு வந்தபொழுது விவசாயிகளின் நிலம் அனைத்தும் அவர்களுக்கே திருப்பி தரப்பட்டது.
**விடை: காங்கிரஸ்**

3. தீனபந்து மித்ரா என்பவர் _______ என்ற நாடகத்தை வங்க மொழியில் எழுதினார்.
**விடை: நீல்தர்பன்**

4. பஞ்சாப் விவசாயிகளைப் பாதுகாப்பதற்காக 1900 இல்______சட்டம் நிறைவேற்றப்பட்டது.
**விடை: பஞ்சாப் நில உரிமை மாற்று**

5. 1918இல் குஜராத்தின் _______ மாவட்டத்தில் இடையறாத பஞ்சத்தின் காரணமாக விவசாயம் பொய்த்தது. **விடை: கேடா**

6. _______ மற்றும் _______ ஆகியோரால் நாதியா மாவட்டத்தில் கலகங்கள் நடைபெற்றன. **விடை: திகம்பர் பிஸ்வாஸ் மற்றும் பிஸ்னு சரண் பிஸ்வாஸ்**

7. ஐரோப்பிய பண்ணையாளர்களின் அடக்குமுறைக்கு பயந்து வங்காளத்தின் அவுரி விவசாயிகள் ___________ மற்றும் ___________ ல் குடியேறினர்.
**விடை: பீகார் மற்றும் உத்திரப்பிரதேசம்**

## III. பொருத்துக.

| | | | |
|---|---|---|---|
| 1. | சந்தால்கள் | (i) | வங்காளம் |
| 2. | பாப்னா கலகம் | (ii) | பீகார் |
| 3. | தக்காண கலகம் | (iii) | குஜராத் |
| 4. | சம்பிரான் சத்தியாகிரகம் | (iv) | சந்தால் பர்கானா |
| 5. | கைரா | (v) | 1875 |

**விடை: 1-iv, 2-i, 3-v 4-ii, 5-iii**

## IV. சரியா, தவறா?

1. பாப்னா விவசாய எழுச்சி என்பது விவசாயிகளால் நடத்தப்பட்டது.
**விடை: சரி**

2. குஜராத் அவுரி சாகுபடியாளர்களின் வேலை நிறுத்தம் அதிகளவில் பரவி விவசாய புரட்சியாக மாறியது. **விடை: தவறு**

3. தக்காண விவசாயிகள் மீட்பு சட்டம் நிறைவேற்றப்பட்டு அதன் மூலம் விவசாயிகளின் குறைகள் களையப்பட்டது.
**விடை: சரி**

4. 1928ல் 30 சதவீதம் அளவிற்கு அரசு நிலவருவாயை உயர்த்தியது.**விடை: சரி**

## V. கீழ்க்காணும் கூற்றை ஆராய்ந்து சரியான விடையை (√) செய்யவும்.

1. **கீழ்க்கண்டவற்றுள் எந்த ஒன்று சந்தால் கலகம் பற்றிய தவறான கூற்றாகும்.**
(அ) 1855-56ல்விவசாயிகளின்எழுச்சியாகக் கருதப்பட்ட முதலாவது கலகம் சந்தால் கலகமாகும்.
(ஆ) இக்கலகம் 1858ல் ஆயுதம் ஏந்திய புரட்சிக்கு இட்டுச் சென்றது.
(இ) ஜமீன்தாரர்கள், பண்ணையாளர்கள், ஆங்கிலேய அலுவலர்கள், இரயில்வே பொறியாளர்கள், ஜமீன்தாரர்கள் மற்றும் வட்டிக்கு பணம் கொடுப்போர் ஆகிய அனைவரும் புரட்சியாளர்களால் தாக்கப்பட்டனர்.
(ஈ) புரட்சியின் தலைவர்கள் கைது செய்யப்பட்டதை அடுத்து கலகம் அடக்கப்பட்டது.
**விடை: (ஆ) இக்கலகம் 1858ல் ஆயுதம் ஏந்திய புரட்சிக்கு இட்டுச் சென்றது**

2. **கீழ்க்கண்டவற்றுள் நிலையான நிலவரித் திட்டம் பற்றிய சரியான கூற்று எது?**
(அ) விவசாயிகள் நிலத்தின் உரிமையாளர் ஆயினர்.
(ஆ) ஆங்கில அரசுக்கு நிலையான வருவாய் கிடைக்கவில்லை.
(இ) விவசாயிகளிடமிருந்து வசூலித்த 10/11 பங்கு வரியினை ஜமீன்தார்கள் ஆங்கில அரசுக்கு செலுத்தினர்.
(ஈ) விவசாயிகளிடமிருந்து வரியை வசூல் செய்யும் அரசின் முகவர்களாக ஜமீன்தார்கள் செயல்படவில்லை.
**விடை: (இ) விவசாயிகளிடமிருந்து வசூலித்த 10/11 பங்கு வரியினை ஜமீன்தார்கள் ஆங்கில அரசுக்கு செலுத்தினர்.**

## VI. குறுகிய வினாக்களுக்கு ஓரிரு வார்த்தையில் விடையளி.

1. **இரயத்துவாரி முறை பற்றி எழுதுக.**
விடை: (i) இரயத்துவாரி முறை 1820இல் தாமஸ் மன்றோ மற்றும் கேப்டன் ரீட் என்பவர்களால் அறிமுகப்படுத்தப்பட்டது.
(ii) இம்முறை மதராஸ், பம்பாய், அசாம் பகுதிகள் மற்றும் கூர்க் ஆகிய இந்திய மாகாணங்களில் கொண்டுவரப்பட்டது.
(iii) இம்முறையின் மூலம் நிலத்தின் உரிமையானது விவசாயிகளின் வசம் ஒப்படைக்கப்பட்டது.

2. **இரயத்துவாரி முறையால் ஏற்பட்ட விளைவுகள் யாவை?**
விடை: **இராயத்துவாரி முறையால் ஏற்பட்ட விளைவுகள்:**
(i) பெரும்பாலான பகுதிகளில் நிலவருவாய் மிக அதிகமாக நிர்ணயிக்கப்பட்டது.
(ii) சிறப்பான பருவக் காலங்களில் கூட விவசாயிகள் நிலவரி செலுத்துவதற்கு மிகவும் சிரமப்பட்டனர்.
(iii) அரசு, ஜமீன்தார்களுக்குப் பதிலாக விவசாயிகளை சுரண்டியது.

3. **பாப்னா கலகம் பற்றி நீவிர் அறிவன யாவை?**
விடை: (i) பாப்னா விவசாய எழுச்சி என்பது விவசாயிகளால் நடத்தப்பட்ட, ஜமீன்தார்களின் அடக்கு முறைக்கு எதிரான இயக்கமாகும்.
(ii) ஜமீன்தார்கள், விவசாயிகளிடம் இருந்து, சட்டத்திற்கு புறம்பான முறையில், வற்புறுத்தி வரி வசூலித்தல், அதிகப்படியான வரி வசூலித்தல், மற்ற பிற வரிகளையும் வழக்கமாக வசூல் செய்தனர்.
(iii) விவசாயிகள் வாடகை செலுத்தவில்லை என்ற போலிக் காரணங்களைக் கூறி அடிக்கடி நிலத்திலிருந்துவெளியேற்றப்பட்டனர்.

www.surabooks.com



**4. மகல்வாரி முறையின் சிறப்பு கூறுகள் இரண்டினை எழுதுக.**

**விடை:** (i) கிராமத் தலைவர் அரசுக்கும், கிராம மக்களுக்கும் இடையே இடைத் தரகராக செயல்பட்டார்.

(ii) இத்திட்டம் கிராமவாரியான மதிப்பீடாக இருந்தது. ஒரே நபர் பல கிராமங்களை தன் வசம் வைத்திருந்தார்.

**5. தக்காண கலகம் பற்றி நீ அறிந்தவற்றை எழுதுக.**

**விடை:** (i) 1875 ஆம் ஆண்டு பூனா மாவட்டத்தில் உள்ள விவசாயிகள் ஒரு கலகத்தில் ஈடுபட்டனர். அது தக்காண கலகம் என்றழைக்கப்பட்டது.

(ii) அப்பகுதி விவசாயிகள், ஆரம்பத்தில் தொடர்ந்து தங்கள் நிலங்களை அபகரித்துக் கொண்டிருந்த உள்ளூர் வட்டிக்காரர்களின் அடக்குமுறையை எதிர்த்துப் புரட்சி செய்தனர்.

## VII. விரிவான விடையளி :

**1. சந்தால் கலகம் பற்றி விரிவான ஒரு கட்டுரை எழுதுக.**

**விடை: சந்தால் கலகம் :**

(i) 1855-56இல் விவசாயிகளின் எழுச்சியாகக் கருதப்பட்ட முதலாவது கலகம் சந்தால் கலகமாகும்.

(ii) பீகாரில் உள்ள ராஜ்மகால் குன்றுகளுக்கு அருகில் உள்ள பகுதிகளில் சந்தால் மக்கள் வேளாண்மை செய்து வந்தனர்.

(iii) இவர்களின் அறியாமையை சாதகமாக பயன்படுத்திக் கொண்ட, நகர்ப்புற நிலக்கிழார்கள் மற்றும் வட்டிக்குப் பணம் தருவோர் சந்தால்களின் நிலங்களை அபகரித்துக் கொள்ள ஆரம்பித்தனர்.

(iv) சந்தால்கள் தங்களுக்கென்று ஓர் அரசாங்கத்தை ஏற்படுத்திக் கொள்ள, சித்து மற்றும் கங்கு என்ற இரண்டு சந்தால் சகோதரர்களின் தலைமையின் கீழ் 10,000 வீரர்கள் ஒன்று கூடினர்.

(v) ஐரோப்பிய பண்ணையாளர்கள், ஆங்கிலேய அலுவலர்கள், இரயில்வே பொறியாளர்கள், ஜமீன்தார்கள் மற்றும் வட்டிக்குப் பணம் கொடுப்போர் ஆகிய அனைவரும் புரட்சியாளர்களால் தாக்கப்பட்டனர்.

(vi) புரட்சியானது பிப்ரவரி 1856 வரை தொடர்ந்தது. புரட்சியின் தலைவர்கள் கைது செய்யப்பட்டதை தொடர்ந்து கலகம் அடக்கப்பட்டது.

**2. பஞ்சாப் விவசாயிகள் இயக்கம் பற்றி விளக்கவும்.**

**விடை:** (i) நகர்ப்புற வட்டிக்காரர்களிடம் கடனைப் பெற்று, கடனை திருப்பி செலுத்தத் தவறிய விவசாயிகள், தங்கள் நிலத்தின் மீது வட்டிக்கடைக்காரர்கள் மேற்கொண்ட ஒடுக்கு முறைகளை விரைந்து தடுக்கும் பொருட்டு பஞ்சாப் விவசாயிகள் புரட்சியில் ஈடுபட்டனர்.

(ii) ஆங்கிலேய அரசு இப்பகுதியில் எந்த ஒரு புரட்சி நடைபெறுவதையும் விரும்பவில்லை. ஏனெனில் அப்பகுதியில் இருந்துதான் ஆங்கிலேய இராணுவத்திற்கு வீரர்கள் தேர்வு செய்யப்பட்டனர்.

(iii) பஞ்சாப் விவசாயிகளைப் பாதுகாப்பதற்காக 1900 இல் "பஞ்சாப் நில உரிமை மாற்று சட்டம்" நிறைவேற்றப்பட்டு சோதனை முறையில் செயற்படுத்தப்பட்டது.

(iv) பஞ்சாபில் இச்சட்டம் சிறப்பாக செயல்பட்டதால் இந்தியாவின் மற்ற பகுதிகளுக்கும் விரிவுபடுத்தப்பட்டது.

(v) இச்சட்டத்தின் படி, பஞ்சாப் மக்கள் விவசாயிகள், சட்ட அங்கீகாரம் பெற்ற விவசாயிகள், வட்டிக்கடைக்காரர்கள் உட்பட இதர மக்கள் என்று மூன்று வகையாகப் பிரிக்கப்பட்டனர்.

(vi) முதல் பிரிவு மக்களிடமிருந்து மற்ற இரண்டு பிரிவு மக்களுக்கும் நிலத்தை விற்பது மற்றும் அடமானம் வைப்பது மீதான கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டன.

www.surabooks.com



# அலகுத் தேர்வு

**காலம் : 60 நிமிடங்கள்** **மதிப்பெண்கள்: 25**

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்.** (3 × 1 = 3)

**1. மகல்வாரி முறையில் 'மகல்' என்றால் என்ன?**

(அ) வீடு (ஆ) நிலம் (இ) கிராமம் (ஈ) அரண்மனை

**2. பர்தோலி சத்தியாகிரகம் யார் தலைமையில் நடத்தப்பட்டது?**

(அ) சர்தார் வல்லபாய் பட்டேல் (ஆ) மகாத்மா காந்தி

(இ) திகம்பர் பிஸ்வாஸ் (ஈ) கேசப் சந்திர ராய்

**3. பூனா மாவட்டத்தில் உள்ள விவசாயிகள் 1875 ஆம் ஆண்டு ஈடுபட்ட கலகம் ________ .**

(அ) தக்காண கலகம் (ஆ) மாப்ளா கிளர்ச்சி

(இ) இண்டிகோ கலகம் (ஈ) பாப்னா கலகம்

**II. கோடிட்ட இடங்களை நிரப்புக.** (3 × 1 = 3)

1. ராஜ்மகால் குன்றுகளுக்கு அருகிலிருந்த நிலங்கள் ______ பயிரிடப்பட்டன.
2. மாப்ளா கலகம் _______ ல் நடைபெற்றது.
3. 'சம்பரான் விவசாயச் சட்டம்' நிறைவேற்றப்பட்ட ஆண்டு _______.

**III. பொருத்துக.** (4 × 1 = 4)

| | | | |
|---|---|---|---|
| 1. | பாப்னா கலகம் | (i) | பீகார் |
| 2. | தக்காண கலகம் | (ii) | குஜராத் |
| 3. | சம்பிரான் சத்தியாகிரகம் | (iii) | வங்காளம் |
| 4. | கைரா | (iv) | 1875 |

**IV. சரியா? தவறா?** (2 × 1 = 2)

1. இரயத்துவாரி முறை, தாமஸ் மன்றோவால் அறிமுகப்படுத்தப்பட்டது.
2. "பஞ்சாப் நில உரிமை மாற்று சட்டம்" 1918ல் நிறைவேற்றப்பட்டது.

**V. ஓரிரு வாக்கியங்களில் விடையளி.** (4 × 2 = 8)

1. இரயத்துவாரி முறையால் ஏற்பட்ட விளைவுகள் யாவை?
2. நிரந்தர நிலவரி திட்டத்தின் சிறப்புக்கூறுகள் ஏதேனும் இரண்டினை குறிப்பிடுக.
3. 1859-60இல் நடைபெற்ற இண்டிகோ (அவுரி) கலகத்திற்கு காரணம் என்ன?
4. பர்தோலி சத்தியாகிரகத்தில் வல்லபாய் பட்டேலின் பங்கு பற்றி எழுதுக.

**VI. விரிவான விடையளிக்கவும்.**

1. பஞ்சாப் விவசாயிகள் இயக்கம் பற்றி விளக்கவும். (1 × 5 = 5)

# விடைகள்

I. **1.** (இ) கிராமம் **2.** (அ) சர்தார் வல்லபாய் பட்டேல் **3.** (அ) தக்காண கலகம்

II. **1.** சந்தால்களால் **2.** ஆகஸ்ட் 1921 **3.** மே 1918

III. 1-iii, 2-iv, 3-i, 4-ii

IV. **1.** சரி **2.** தவறு

V. **1.** பார்க்க சுராவின் கையேடு VI-2 (கூடுதல்) **2.** பார்க்க சுராவின் கையேடு VI-1
**3.** பார்க்க சுராவின் கையேடு VI-4 **4.** பார்க்க சுராவின் கையேடு VI-6

VI. **1.** பார்க்க சுராவின் கையேடு VII - 2 (கூடுதல்)

☆☆☆

**அலகு 4**

# மக்களின் புரட்சி

## மதிப்பீடு

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்.**

**1. பாளையக்காரர் முறை ஏற்படுத்தப்பட்ட ஆண்டு**

(அ) 1519 (ஆ) 1520 (இ) 1529 (ஈ) 1530

**விடை : (இ) 1529**

**2. பின்வரும் தமிழ்நாட்டு பாளையக்காரர்களுள் ஆங்கில ஆட்சியை எதிர்த்ததில் முன்னோடியானவர்**

(அ) பூலித்தேவர் (ஆ) யூசுப்கான் (இ) கட்டபொம்மன் (ஈ) மருது சகோதரர்கள்

**விடை : (அ) பூலித்தேவர்**

**3. காலின் ஜாக்சன் எந்தப் பகுதியின் ஆட்சியாளர்?** **(ஏப்ரல் 2025)**

(அ) மதுரை (ஆ) திருநெல்வேலி (இ) இராமநாதபுரம் (ஈ) தூத்துக்குடி

**விடை : (இ) இராமநாதபுரம்**

**4. வீரபாண்டிய கட்டபொம்மன் கீழ்க்காணும் எந்த இடத்தில் தூக்கிலிடப்பட்டார்?** **(அரையாண்டுத் தேர்வு 2023)**

(அ) பாஞ்சாலங்குறிச்சி (ஆ) சிவகங்கை

(இ) திருப்பத்தூர் (ஈ) கயத்தாறு **விடை : (ஈ) கயத்தாறு**

**5. வேலு நாச்சியார் எப்பகுதியின் ராணி ஆவார்?**

(அ) நாகலாபுரம் (ஆ) சிவகிரி (இ) சிவகங்கை (ஈ) விருப்பாச்சி

**விடை : (இ) சிவகங்கை**

**6. 'திருச்சிராப்பள்ளி பிரகடனம்' யாரால் வெளியிடப்பட்டது?** **(காலாண்டுத் தேர்வு 2023)**

(அ) மருது பாண்டியர்கள் (ஆ) கிருஷ்ணப்ப நாயக்கர்

(இ) வேலு நாச்சியார் (ஈ) தீரன் சின்னமலை

**விடை : (அ) மருது பாண்டியர்கள்**

**7. கீழ்க்காண்பவற்றில் தீரன் சின்னமலையோடு தொடர்புடைய பகுதி எது?**

(அ) திண்டுக்கல் (ஆ) நாகலாபுரம்

(இ) புதுக்கோட்டை (ஈ) ஓடாநிலை **விடை : (ஈ) ஓடாநிலை**

**8. ராணி லட்சுமிபாய் எப்பகுதியில் ஏற்பட்ட புரட்சியை வழிநடத்தினார்?** **(காலாண்டுத் தேர்வு 2023)**

(அ) மத்திய இந்தியா (ஆ) டெல்லி

(இ) கான்பூர் (ஈ) பரெய்லி **விடை : (அ) மத்திய இந்தியா**



www.surabooks.com